விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 02 வெள்ளிக்கிழமை (14.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 57


ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## யாழ்.நூலகத் திறப்பு விழா ரத்து


# மாநகர முதல்வர்-உறுப்பினர்கள் கூண்டோடு இராஜினாமா !



(அலுவலக நிருபர்)

**யாழ்.பொதுசன நூல்நிலையத்தை இன்று காலை திறப்பதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியான நிலையில், யாழ்.மாநகர சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னமும் 72 மணித்தியாலங்கள் இருக்கையில், மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் உட்பட சபை உறுப்பினர்கள் திடீரென இராஜினாமாச் செய்துள்ளனர்.**

பல கோடிக்கணக்கான ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட யாழ்.பொதுசன நூல் நிலையத்தை திறந்து வைப்பதற்கு எழுந்த சர்ச்சைகளை அடுத்து, நேற்றுக் காலை யாழ்.மாநகர சபையின் விஷேட கூட்டத்தில், இன்று நடைபெறஇருந்த யாழ்.நூலகத் திறப்பு விழா ரத்துச் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் உட்பட 7 உறுப்பினர்கள் தமது பதவிகளை நேற்று உடனடியாக இராஜினாமாச் செய்தனர்.23 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்.மாநகர சபையில் ஏனைய உறுப்பினர்கள் இன்று தமது இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



யாழ்.பொது நூலகத் திறப்பு விழா ரத்துச் செய்யப்படுவது குறித்தும் தமது இராஜினாமாக் குறித்தும், யாழ்.மாநகர சபை முதல்வர் கந்தையன் உட்பட சபை உறுப்பினர்கள் கையெழுத்திட்டு நேற்று அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்.நூலகத்திறப்புக்கள் அபகரிப்பு

## பாதுகாப்பை பலப்படுத்த படையினர் குவிப்பு !

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட யாழ்.நூல் நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.யாழ்.நூலகத்தின் திறப்புக்கள் இனந்தெரியாதோரால் காவலாளிகளிடமிருந்து அபகரித்துச் செல்லப்பட்டதையடுத்தே நூல் நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நூல் நிலையத்தைச் சுற்றி இராணுவத்தினர் துப்பாக்கிகள் சகிதம் காவல் காத்து நிற்க நூல் நிலையத்தின் நுழைவாயிலில் பொலிஸார் காவலுக்கு நிறுத்தப் பட்டுள்ளனர். நூல் நிலையத்தைச் சுற்றிவர இராணுவத்தினரும் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த போதும் அப்பாதையூடாக வழமையான போக்குவரத்து இடம் பெறுகிறது. (வ)

## மானிப்பாய் சம்பவத்தைக் கண்டித்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மீதும் பொது மக்கள் மீதும் படையினர் நடத்திய படுமோசமான வன்முறைத் தாக்குதல்களைக் கண்டித்தும்,சம்பவம் தொடர்பாக பக்கச் சார்பற்ற வகையில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெறவுள்ளது.யாழ்.பல்கலைக் கழக முன்றலில் இன்று காலை 9மணிக்கு ஆரம்பமாகும் ஆர்ப்பாட்டப் பேரணி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் வரை செல்லவுள்ளது.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம் பெறும் இவ்வார்ப்பாட்டப் பேரணியில் குடாநாட்டு மக்கள் அனைவரையும்

(10ம் பக்கம் பார்க்க)

## பொது அமைப்புக்கள் முதல்வருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜலிங்கம் தலைமையில் யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று யாழ்.மாநகர சபை முதல்வர் எஸ்.கந்தையனை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## அனைத்துப்பீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான பொதுக் கூட்டம் இன்றுகாலை 9மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு அனைத்து மாணவர்களையும் சமுகம் தருமாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே.பரணீதரன் கேட்டுள்ளார். (ந-5)

## மிருசுவில் படுகொலை

## ஐந்து எதிரிகளை சாட்சி அடையாளம் காட்டினார்

(கொழும்பு)

மிருசுவில் படுகொலை வழக்கு விசாரணை நேற்றுக் கொழும்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தில் முதற் சாட்சியான பொ.மகேஸ்வரன் நேற்று நடந்த அடையாள அணிவகுப்பில் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து படைச் சிப்பாய்களையும் அடையாளம் காட்டியுள்ளார் இவ்வடையாள

(10ம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் சம்பவம்

## கண்காணிப்புக் குழுவிடம் நேற்று மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெணபோராளிகள் மீதும்,பொது மக்கள் மீதும் படையினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்தும்,அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்,நேற்று யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் கூட்டாக ஆராய்ந்துள்ளன.

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நூறிற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய்ச் சம்பவம் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

மானிப்பாயில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சம்பவத்தின் போது இராணுவத்தினர் நடந்து கொண்ட முறை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்லவின் உத்தரவுக்கு அமைய இராணுவப் பொலிஸார் இந்த விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்தினா தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை விசாரணைக்குட்படுத்தி உரிய நடவடிக்கை மேற் கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## நூலகத் திறப்பு விழாவை தடுப்பது வரலாற்றுத் தவறு

# இரத்தக்களரி ஏற்படுவதற்கு நான் காரணமாக இருக்கவிரும்பவில்லை

## -ஆனந்தசங்கரி எம்.பி விரிவான விளக்கம்-



(யாழ்ப்பாணம்)

இன்று நடை பெறஇருந்த யாழ். பொது நூலகத் திறப்பு விழா குறித்து நூலகத்தைத் திறந்து வைக்கவிருந்தவரும்,தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தனது பக்க நியாயத்தை விளக்கி விரிவான அறிக்கைஒன்றை நேற்று விடுததுள்ளார்.அந்த அறிக்கை இங்கு அப்படியே பிரசுரமாகிறது.

யாழ்ப்பாண பொது நூல் நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்று (14.02.2003)வைபவ ரீதியாக அங்குரார்பணம் செய்து பொது மக்களுக்கு அர்ப்பணிப்புச் செய்யப்பட இருந்ததை அனைவரும் அறிந்த விடயமே.

1981ம் ஆண்டு தீக்கிரையாக்கப்பட்ட இந் நூல் நிலையம் கடந்த 20 ஆண்டு காலத்தில் ஏற்கனவே புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களிற்கு அர்ப்பணிப்புச் செய்யப்பட்டிருந்தால் கடந்த சில ஆண்டுகளாக உயர் வகுப்பு மாணவர்கள் ஒரு தக்க சூழலில் தங்கள் கல்வியையும் ஆய்வுகளையும் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். தற்போது இதற்குப் பதிலாக இயங்கிக் கொண்டிருக்கும் நூல்நிலையத்தில் அதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் போதியளவு இருக்கவில்லை இதன் விளைவால் அண்மைக்காலத்தில் பல்கலைக் கழ்க அனுமதியில் மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கீட்டு இடங்களைக்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




# CRICKET WORLD CUP 2003






## இங்கிலாந்து சிம்பாப்வே போட்டி நேற்று நடைபெறவில்லை

சிம்பாப்வேக்கு எதிரான உலகக் கிண்ணப் போட்டி ஹராரேயில் நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு விளையாட முடியாது என கூறிவரும் இங்கிலாந்திற்கு 4 மறைப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டுமென இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை சர்வதேச கிரிக்கெற் பேரவையிடம கோரியுள்ளது.

இங்கிலாந்தின் ஆரம்ப உலகக் கிண்ணப் போட்டி நேற்று சிம்பாப்பேக்கு எதிராக நடைபெற விருந்தது. எனினும் பிரச்சினைக்கு உள்ளான சிம்பாப்வேக்கு தனது அணி செல்வதற்கு -இங்கிலாந்து கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை மறுப்புத் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து நேற்றைய போட்டிகள் ரத்து செய்யப்பட்டன. இதைத்தொடர்ந்து இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை இவ்வாறு தெரிவித்துள்ளது. சிம்பாப்வே பாதுகாப்புக்கு உகந்த நாடு இல்லாவிட்டால் அதில் நடைபெறவுள்ள அனைத்துப் போட்டிகளையும் மாற்ற வேண்டும் எனவும், ஹராரே மைதானம் பாதுகாப்பு எனக் கருதினால் சிம்பாப்வேக்கு 4 புள்ளிகளையும் வழங்க வேண்டும் எனவும் இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## இன்றைய ஆட்டங்கள்

### இலங்கை எதிர் பங்களாதேஷ்

(பீட்டர் மெரிட்ஸ் பார்க் மைதானம்)

## இந்தியாவில் கிரிக்கெற் சூதாட்டம்

தென் ஆபிரிக்காவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியை மையமாக வைத்து சென்னை, கொல்கத்தா, மும்பை போன்ற முக்கிய நகரங்களில் கிரிக்கெற் சூதாட்டங்கள் நடந்து வருவதாகவும், இதன் ஒரு பகுதியாக 1000 கோடி ரூபா வரை சூதாட்டம் நடந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சூதாட்டத்திற்கு பயன் படுத்திய 13 தொலைபேசிகள், 2கலர் ரீ.வி, செல்போன் உட்பட பல சாதனங்களை பொலிசார் கைப்பற்றினர். உலகக் கிண்ணப் போட்டி முடியும் வரை தொடர்ந்து சூதாட்டம் நடக்கும் என்பதால் பொலிசார் தொடர்ந்து உசார்படுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட நாளில் நடக்கும் போட்டியில் வெற்றி பெறப் போகும் அணி எது? அதிக ஓட்டங்கள் குவிக்கும் வீரர் யார்? சிறந்த பந்து வீச்சாளர் யார்? ஆட்டநாயகன் விருது யாருக்கு? என்பன போன்ற வகைளில் சூதாட்டம் நடப்பதாக பொலிசார் தெரிவித்தனர். க்கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கிரிக்கெற் சூதாட்டம் மிகப் பெரிய பிரச்சினையை உண்டாக்கியது. நடக்கும் உலகக் கிண்ணப் போட்டியில் சூதாட்டதை ஒழிக்க தென் ஆபிரிக்கா நிர்வாகிகள் தீவிர வேட்டை நடத்தி வருகின்றன.

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### நியு,சிலாந்து எதிர் மேற்கிந்தியத் தீவுகள்

### நியூசிலாந்து

50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| பிளெமிங் | c&b | டிலோன் | 25 (25) |
| எல். வெட்டேரி | b | b றெக்ஸ் | 13 (25) |
| ஜே. அஸ்ரில் | c ஜோக்கப்ஸ் | b ஹிண்ட்ஸ் | 46 (70) |
| பி. ஸ்டைரிஸ் | c பவல் | b டிரெக்ஸ் | 5 (15) |
| எல். கைம்ஸ் | c டிலோன் | b ஹிண்ட்ஸ் | 37 (44) |
| விக்சென்ட் | c கூப்பர் | b ஹிண்ட்ஸ் | 9 (11) |
| ஹரிஸ் | b கைல் | | 19 (35) |
| மக்கல்லம் | Not out | | 36 (53) |
| அடம்ஸ் | Not out | | 35 (24) |

உதிரிகள் –16

### பந்து வீச்சு -மேற்கிந்தியத் தீவுகள்

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| டிலான் | 10 | 30 | 1 |
| மக்லீன் | 6 | 38 | - |
| டிரெக்ஸ் | 10 | 49 | 2 |
| ஹிண்ட்ஸ் | 10 | 35 | 3 |
| கூப்பர் | 9 | 42 | - |
| கைல் | 5 | 37 | 1 |

### மேற்கிந்தியத் தீவுகள்

49.4 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| கைல் | c பிளெமிங் | b அடம்ஸ் | 22 (29) |
| ஹிண்ட்ஸ் | c ஸ்டைரிஸ் | b அடம்ஸ் | 14 (31) |
| லாரா | Run out | | 2 (4) |
| சந்ரபோல் | L B W | b ஓரம் | 2 (7) |
| கூப்பர் | c பொண்ட் | b அடம்ஸ் | 3 (11) |
| சர்வான் | b வெட்டோரி | | 75 (99) |
| பவல் | b ஓரம் | | 14 (14) |
| ஜேகப்ஸ் | c ஓரம் | b ஸ்டைரிஸ் | 50 (73) |
| டிரெக்ஸ் | Not out | | 16 (18) |
| மக்லின் | Run out | | 5 (7) |
| டிலோன் | b அடம்ஸ் | | 8 (6) |

உதிரிகள் –10

### பந்து வீச்சு - நியூசிலாந்து

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| பொண்ட் | 10 | 43 | - |
| அடம்ஸ் | 9.4 | 44 | 4 |
| ஓரம் | 10 | 26 | 2 |
| கைம்ஸ் | 1 | 21 | - |
| வெட்டோறி | 10 | 38 | 1 |
| அஸ்ரில் | 4 | 14 | - |
| ஸ்டைரிஸ் | 5 | 31 | 1 |



அடம்ஸ்ஸின் (c)கட்சை தவறவிடும் சந்திரப்போல்

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
வலம்புரி
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி
கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
வலம்புரி
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது
இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலக்க் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ..........

முகவரி : ..........

தே.அ.அ.இல : ..........

கையொப்பம்: ..........

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# ஜப்பான் வழங்கும் உதவிகள் நாடு முழுவதும் பயன்படவேண்டும்

## யசுஷி அகாசியிடம் ஸ்ரீ விபசி தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

ஜப்பானின் நிதியுதவி இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதிக்கென்று குறித்தொதுக்கப்படுவதாக இருத்தலாகாது என்று மல்வத்தை விகாரைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்த ஜப்பானின் விசேட பிரதிநிதி யசுஷி அகாஷியிடம் மகாநாயக்க தேரர் ரம்புக்வெல ஸ்ரீ விபசி தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வழங்கும் உதவிகள் முழு நாட்டிற்கும் உரியதாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்த தேரர், பிரதம விக்கிரமசிங்க நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பாடுபட்டு வருகிறார். இவ்விடயத்தில் எமது ஆசிகள் பிரதமருக்கு என்றும் உண்டு எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்தமைகாக அகாஷிக்கு தேரர் நாட்டின் சார்பில் நன்றியையும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமாதான தூதுவர் அகாஷி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண. உடுகம ஸ்ரீ புத்திரகித்த தேரரையும் சென்று சந்தித்துள்ளார்.

வரலாற்றுத் தொடர்புடைய இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் காரணமாக ஜப்பான் இலங்கையின் மூத்த சகோதரர் என்று கணிக்கப்படுவதாக தேரர் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்.

அழிந்து போகும் இலங்கையின் நீர் வளங்களை பேணுவதற்கு ஜப்பான் உதவி வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டதுடன், தாக்குதல்களின் பின் தலதா மாளிகையின் புனர்நிர்மாணத்திற்கு ஜப்பான் வழங்கிய உதவிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

தாக்குதலால் சிதைவுற்றிருந்த தலதா மாளிகையின் படங்களை தியவதனநிலமேநிரஞ்சன் விஜயரத்ன தூதுவருக்கு காண்பித்தார். சமாதான தூதுவருடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், ஐ.தே.க தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவும் அங்கு சென்றிருந்தனர். (உ)

# பாடநூல் விநியோகம் தாமதம்

# கல்வி அமைச்சே காரணம்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கான புத்தக விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு கல்வி அமைச்சே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

புத்தகங்களை அச்சிடுதல், விநியோகித்தல் என்பவற்றை மேற்பார்வை செய்யும் குழுவின் தலைவர் கே.ஜே.விஜயதாஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தரம் 5 ற்கான ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடப் புத்தகங்களும் அச்சிடப்பட்டு விநியோகிப்பதற்காக கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

நாடு பூராவும் உள்ள 41 கல்வி வலயங்களிற்கு பாடப் புத்தகங்களை இலவசமாக விநியோகம் செய்யும் பொறுப்பு கல்வி அமைச்சிற்கே உரியது.

இலங்கையில் 45 லட்சம் மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென 3 கோடி 80 லட்சம் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

# வடகிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு

## வழங்குமாறு முஸ்லிம் பிரதிநிதிகள் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்குப் பகுதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படும்போது 10 வருடங்களுக்கு முன்னர் வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு முஸ்லிம் அமைப்பின் பிரதிநிதி எம்.ஐ.எம்.மொஹீதீன கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் கொழும்பு ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற இடம்பெயர்ந்தவர்களின் சொத்துரிமை மற்றும் காணி தொடர்பான மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பான அறிக்கை ஒன்றும் அங்கு வெளியிடப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் அங்கிருந்து 10 வருடங்களுக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர்.

அப்போது அவர்களினால் விட்டுச் செல்லப்பட்ட சொத்துக்களின் பெறுமதி 110 மில்லியன் டொலராகும்.

தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் தமிழ் மக்களை மீளக் குடிமர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வடக்கில் வாழும் முஸ்லிம்களின் விவகாரத்தினையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அவர்கள் மீளக் குடியேறும் போது அவர்களுக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன், அவர்களது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதுடன் சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கபடவேண்டும்.

வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும் என்றுள்ளது. (உ-10)


# மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி
பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 500
2ஆம் பரிசு ரூபா 250
3ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*அமரர் கலாநிதி க.கனகராசா (முன்னாள் அதிபர் மில்க்வைற்) அவர்கள் ஞாபகார்த்தமாகப் பரிசில்கள் வழங்கப்படும்.

## போட்டியின் விதிகள்

* ஏழாந்தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
* கட்டுரையின் தலைப்பு : ''முயற்சியின் பயன்''
* கட்டுரை 125 தொடக்கம் 150 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 28.02.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-2

மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
கற்கும் தரம் :------------------------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------------
வகுப்பாசிரியர்


# செய்தித்துளிகள்

### கொக்குவில் வாசியின் சடலம் மகரகமவில்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மகரகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட கொக்குவில் மேற்கைச் சேர்ந்த எஸ்.பாலசிங்கம் (வயது 60) என்பவர் அங்கு மரணமடைந்துள்ளதாகவும் அவரது சடலம் மகரகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு வாரத்திற்குள் அவரது உறவினர்கள் சடலத்தைப் பொறுப்பேற்குமாறும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-5)

### மாகாண அமைச்சர் காவலில்

(கோட்டை)

தென் மாகாணசபை அமைச்சர் ஒருவர் தேர்தல் ஒழுங்கு மீறல்கள் தொடர்பாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது சட்ட ஒழுங்கு மீறல்களில் சம்பந்தப்பட்டிருந்ததாகவே இந்த அமைச்சர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் புலன் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த அமைச்சரை ஒரு கொலை தொடர்பாக கைது செய்யச் சென்ற பொழுது அவரது வீடும் பொலிஸாரால் சோதனையிடப்பட்டதாகவும், அவ்வீட்டிலிருந்து 2 ரி-56 துப்பாக்கிகளும் 2 பிஸ்டல்களும் 2 றிவோல்வர்களும் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். (பி)

### குருநகர் மீன்வாடி இயங்குகிறது

(குருநகர்)

குருநகர் மீன் சந்தைப்படுத்தும் வாடி 12 வருடங்களுக்குப் பின் பழைய இடமான சிறுத்தீவு கடலேரி முன்பாக இப்பொழுது இயங்கி வருகின்றது.

1991 ஆம் ஆண்டு இராணுவம் மண்டைதீவையும், தீவகப் பகுதிகளையும் கைப்பற்றியதை அடுத்து மேற்படி வாடியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-74)

### குடிமனையில் கடற்படை முகாம்

(காரைநகர்)

காரைநகர் நீலங்காடு கிராமத்தில் கடற்படையினர் பாரிய முகாம் அமைத்துள்ளதால், இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் பாலகாடு கரையோரப் பகுதிகளில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ளனர். (உ-246)

### வடிகால்களில் கழிவு நீர் தேக்கம்

(குருநகர)

யாழ். சின்னக்கடைக்கும் முன்னாள் மாநகர சபை எல்லைக்கும் உட்பட்ட பாங்ஷால் வீதி மற்றும் 1,2,3ஆம் குறுக்குத் தெரு வீதிகள் அடங்கிய பகுதிகளில் வடிகால்கள் துப்பரவு மற்றும் குப்பை கூழங்களை அகற்றும் பணிகளை மாநகர் சபை சுகாதார ஊழியர்கள் மேற்கொள்வதில்லை என புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் வீசப்படுகின்ற எச்சங்கள் ஆங்காங்கே தேங்கியுள்ளதோடு வடிகால்களிலும் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் அப்பகுதியில் நுளம்பு போன்ற நோய்க் கிருமிகள் பெருகும் அபாயம் தோன்றிவருகின்றது. (உ-74)

### வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாராந்தம் நடத்திவரும் நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ''வேலுண்டு வினை தீர்க்க'' என்னும் தலைப்பில் சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலய ஆசிரியை செல்வி தேவரஞ்சனா புவனேந்திரன் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-8)

### புனரமைப்பு

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு ஜே/131 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட பொதுக் கிணறுகள் மற்றும் தனியாரின் பழுதடைந்த மலசல கூடங்கள் என்பவற்றை கியூடெக் நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

20 கிணறுகளும் 15 மலசல கூடங்களும் இத்திட்டத்தில் அடங்குகின்றன. (உ-20)

### அலுவலகம் திறப்பு

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலக வலயம் 2 இற்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் இன்று வெள்ளிக்கிழமை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-24)

### வேணுகான இசை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு ''இலக்கிய சமயப் பேருரையும், வேணுகான இசையும்'' இடம்பெறவுள்ளன.

பாராளுமன்ற முன்னைநாள் சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளரும் மூத்த பத்திரிகையாளருமான செ.நடராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யா/பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவரும் பேராசிரியருமான அ.சண்முகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10)

### 43 குடும்பங்கள் மீளக் குடியமர்வு

(மாதகல்)

வலிகாமம் தென்மேற்கு-சண்டிலிப்பாய் பிரதேச செயலக மானிப்பாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஏ-9 பாதையூடாக வந்த 43 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

இதேவேளை, இக்குடும்பங்களுக்கு இன்னமும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-56)

### நெல் கொள்வனவு

(மாதகல்)

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அதன் அங்கத்தவர்களிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வருகின்றது.

இதேவேளை, நியாய விலையில் இப்பகுதி விவசாயிகளிடம் இருந்து வெங்காயம் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-56)

### நற்கருணை விழா

(மாதகல்)

மாதகல் கடற்கரை லூர்து அன்னை ஆலயத்தில் நாளை சனிக்கிழமை நற்கருணை விழாவும் தேர்ப்பவனியும், மறுநாள் காலை திருநாள் திருப்பலியும் இடம்பெறவுள்ளது. (உ-56)

# பிரி.விமான நிலையங்களுக்கு அல்கெய்டா ஆபத்து

## பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜரூர்

(லண்டன்)

பிரிட்டனில் அல்கெய்டா பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதால், கேந்திர நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரிட்டனிலுள்ள விமான நிலையங்கள்அனைத்திலும் பாதுகாப்புப படையினர் குவிக்கப் பட்டுவருகிறார்கள்.

விமானம் ஒன்றை சுட்டுவீழ்த்துவதற்கு அல்கெய்டா இயக்கம் திட்டம் தீட்டியிருப்பதாக கிடைத்துள்ள தகவலொன்றைத் தொடர்ந்து பொலிஸார் உஷாரடைந்துள்ளனர்.

அல்கெய்டா இயக்கத்தினர் விமான எதிர்ப்பு ஏவுகணையொன்றை தீவிரவாதிகள் கடத்தி வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் தேடுதல் வேட்டை தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 11ஆம் திகதி பயங்கரவாத தாக்குதல் போன்று பிரட்டனிலும் இடம்பெறலாம் என பிரிட்டிஷ் அரசாங்கம் எச்சரித்துள்ளதை அடுத்து, பிரிட்டனில் விமான நிலையங்களின் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

அல்கெய்டா இயக்கத்தின் ஏவுகணைக் குழுவொன்று விமானங்கள் மீது தாக்குதல் நடத்த ஐரோப்பாவில் இருந்து ஏவுகணைகளை பிரிட்டனுக்கு கடத்தி வந்துள்ளதாகவும் பிரிட்டிஷ் விமானம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்த அந்தக குழு தயாராகி வருவதாகவும் பிரிட்டிஷ் ஊடகங்களில் செய்தி வெளியானதை அடுத்து, பிரிடடனின் மிகப்பெரிய ஹீப்ரு விமான நிலையத்தின் பாதுகாப்புப் பணிகளில் துருப்பினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன், ஏனைய விமான நிலையங்களின் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

### அமெரிக்காவிலும் அச்சம்

இதேவேளை, அல்கெய்டா இயக்கத்தின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் அமெரிக்க நகரங்களிலும் பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரிங்கர் விமான எதிர்ப்பு ஏவுகணை பூட்டப்பட்ட ஜீப்கள் வாஷிஙடன நகரைச் சுற்றி காவல் புரிகின்றனர்.

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகனின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.(பி-9)

# துருக்கியின் கவலை

(வாஷிங்டன்)

ஈராக்கின் மீது தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில், துருக்கியின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக நேட்டோ முன்வைத்துள்ள திட்டத்தைத் தடுக்க பெல்ஜியமும், பிரான்ஸும் தீர்மானித்திருக்கின்றன.

தமது தீர்மானம் தொடர்பாக நேட்டோவிற்கு அறிவிக்கப்படும் என்று பெல்ஜிய வெளிவிவகார அமைச்சர் லூஜிஸ் மைக்கல் தெரிவித்துள்ளார். (பி-9)



அமெரிக்காவில் உள்ள பிரபல தொழில் நிறுவனம் ஒன்றில், 11ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெறும் நாயினைக் கொஞ்சி வீடைகொடுக்கும் அந் நிறுவன ஊழியர் ஒருவர்.

## இந்திய – ரஷ்ய கூட்டுத்தயாரிப்பு

# 'பிரமொஸ்' ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

(புதுடில்லி)

இந்தியாவும், ரஷியாவும் கூட்டாகத் தயாரித்துள்ள பிரமொஸ் ஏவுகணை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.

கப்பல்களைத் தாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணை ஒரஸா மாநிலத்தில் சாந்திப்பூர் கடல்பகுதியில் இருநது சோதித்துப் பார்க்கப்பட்டதாக இந்திய அதிகாரிகள் கூறினர்.

இந்தியக் கப்பல் படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ் ராஜ்புட் கப்பல் தளத்திலிருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் அந்தச் செய்தி மேலும் கூறியது. பிரமபுத்திராவையும், மாஸ்கோவையும் குறிக்கும் இந்த ஏவுகணைக்கு பிரமொஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. (பி-9)

## உலக தரிசனம்

### சர்வதேச நீதிமன்றுக்கு 18நீதிபதிகள் தெரிவு

(நியூயோர்க்)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகளாக 18பேரை ஐக்கிய நாடுகள் சபைதெரிவு செய்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 18நீதிபதிகளுள் 7பேர் பெண்களாவர்.

இதேவேளை, தெரிவு செய்யப்பட்ட இந்த நீதிபதிகளுள் தெற்காசியாவைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லைஎன ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (உ-2)

# தினமும் 40லட்சம் எலிகள் பிறக்கின்றன

(சிட்னி)

உலகம் முழுவதும் நாளாந்தம் 40லட்சம் எலிகள் பிறப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

39நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 2வது சர்வதேச எலி மாநாட்டில் கலந்து கொண்டபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலிகள் சுமார் 70 நோய்களைப் பரப்பக்கூடிய தன்மையைக் கொண்டிருப்பதாக ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும், இதனை விட அதிகமான நோய்களை எலிகள பரப்புவதாக நம்பப்படுகிறது என்று அவுஸ்திரேலிய ஆய்வாளர் டாக்டர் லியான்ஹின்ஸ் தெரிவித்துள்ளார்.

எலிகள் ஒருசிலமாதங்களே உயிர் வாழ்ந்தாலும், அவற்றின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதன்ால், மூன்றாம் மண்டல நாடுகளில் எலிகளினால் பரவும் நோய்கள் தொற்றுவோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுளளதாகவும் அவர் சுட்டிக் காட்டி இருக்கின்றார். (பி-9)

# அதிஉயர் கட்டிடத்தை நிர்மாணிக்கத் திட்டம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்ட உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் அமைந்துள்ள இடத்தில் உலகின் உயரமான கட்டிடத்தை அமைக்க நியூயோர்க் நகரசபை தீர்மானித்துள்ளது.

9மாதங்களில் இருந்து இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு மாதிரிகளில் ஒன்று உலக வர்த்தக மையம் அமைந்திருக்கின்ற 16ஏக்கர் காணியில் அமைக்கப் படும்.

இதில் நியூயோர்க் நகர கட்டிட நிபுணர்கள் சமர்ப்பித்த முதலாவது மாதிரி 1665அடி உயரமாகும்.

ஜேர்மன் கட்டிடக் கலைஞர் ஒருவர் சமர்ப்பித்த மாதிரி 1776அடி உயரம் கொண்டதாக இருக்கும்.

உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்களைக் கடந்த 2001ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 11ஆம்திகதி தீவிரவாதிகள் விமானம் மூலமாக இடித்துத் தகர்த்தமை தெரிந்ததே.

மலேசியாவில் உள்ள பெற்றோமஸ கோபுரமே உலகில் உயரமான கோபுர மாகும் இதன் உயரம் 183அடிஆகும். (பி-9)

# காஷ்மீர் பயங்கரவாதம் பாகிஸ்தானே காரணம்

### சி.ஐ.ஏ.தலைவர்கூற்று

(நியூயோர்க்)

காஷ்மீரில் எல்லை கடந்து வந்து பயங்க்ரவாத நடவடிக்கைகளில் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருவதற்கு, பாகிஸ்தானே காரணமாக இருந்து வருகின்றது என அமெரிக்க உளவு நிறுவமான சி.ஐ.ஏயின் தலைமையில் ஜோர்ஜ் கெனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் உளவுத்துறைகள் தொடர்பான செனெற் கொமிட்டியின் முன்னிலையில் பேசுகையிலேயே அவர் இதைக்கூறினார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பெருமளவில் அல்கெய்டா பயங்கரவாதிகள் இன்னமும் செயல் பட்டுவருகிறார்கள் என்று அவர் கூறினார்

ஈராக் பிரச்சினை மற்றும் உலகப் பாதுகாப்பு நிலைமைகள் பற்றியும் செனெற் கொமிட்டியில் விவாதிக்கப்பட்டது. (பி-9)

## வடகொரியாவிடம்

# அமெரிக்காவைத்தாக்கக் கூடிய அணு ஆயுதம்

(நியூயோர்க்)

அமெரிக்காவைத் தாக்கக்கூடிய அணு அயுதங்கள் வடகொரியாவிடம் இருப்பதாக அமெரிக்கப் புலனாய்வாளர்கள் நம்புகிறார்கள்.

அமெரிக்காவைத்தாக்கக் கூடிய ஓரிரு அணு ஆயுதங்கள் வடகொரியாவிடமிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இரண்டு கட்டங்களாகச் செலுத்தப்படக் கூடிய ரீபொபெங் - 2 ஏவுகணை வடகொரியாவிடம் இருக்கின்றது. இது அமெரிக்காவை எட்டும் திறன் கொண்டது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் பாதுகாப்புப் புலனாய்வு நிலையத்தின் பணிப்பாளரை மேற்கோள்காட்டி இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வடகொரியா இரகசியமாக அணு ஆயுதம் உற்பத்தி செய்து வருவதாகக் கூறப்படுவது பற்றி, அமெரிக்கா வடகொரியாவுடன் பேச்சுக்கள் நடத்த விரும்புவதாகக் கூறப்படுவது வெறும் ஏமாற்றுத்தந்திரம் என்றும் பேச்சுக்கள் பற்றி பேசிய படியே பெருமளவில் இராணுவக்குவிப்பை அது மேற்கொண்டுவருவதாகவும் வடகொரியச் செய்தி ஸ்தாபனம் ஒன்று கூறியுள்ளது.

நாம் தாக்கப்பட்டால் எமது இராணுவமும் மக்களுக்கு பலமான முறையில் பதிலடி கொடுப்பார்கள் என்றுஅந்த செய்தி கூறியது. (பி)

# 'ரிசின்' என்னும் விஷத்தை பயங்கரவாதிகள் பரப்புவார்களா?

(சிங்கப்பூர்)

'ரிசின்' எனும் கொடிய விஷத்தைப் பயங்கரவாதிகள் பரப்பிவிடக்கூடும் என்றும் அதனால் பொதுமக்கள் மத்தியில் பயங்கர விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் உலக நாடுகள் பலவற்றிலும் அச்சம் நிலவுகின்றது.

அண்மையில் லண்டனில் பயங்கரவாதிகள் தங்குமிடமொன்று சோதனையிடப்பட்ட போது, இந்த ரிசின் மறைத்து வைக்கப் பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

'ரிசின்' பரப்பப்படுமானால் அதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதுபற்றி பல நாடுகள் ஆலோசித்து வருகின்றன.

இது குறித்து சிங்கப்பூர் அரசு சில முக்கிய முன்முயற்சிகளை எடுத்துள்ளது. சிங்கப்பூரிலுள்ள வைத்தியர்களுக்கு இதுபற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆமணக்கு விதையிலிருந்து எடுக்கப்படும் இக்கொடிய விஷத்தை, நுகர்ந்தவர்க்கு 4முதல் 8 மணி நேரத்தில் காய்ச்சல் ஏற்படும். ஜீரணக் கோளாறும் முச்சுத் திணறலும் ஏற்படும். இதைத் தடுக்க மருந்து இல்லை. பாதிக்கப்பட்டவரின் முக்கிய உறுப்புக்கள் செயல் இழக்காமல் டாக்டரால் தடுக்கமுடியும் என்று, டாக்டர்களுக்கு சிங்கப்பூர் அரசு அனுப்பியுள்ள அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 5ஆம் திகதி லண்டனில் பயங்கரவாதிகளின் மறைவிடத்தை பொலிஸார் சோதனையிட்டபோது அங்கு ரிசின் எனப்படும் கொடிய விஷம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அங்கிருந்து வடக்கு ஆபிரிக்காவை சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

வடக்கு ஈராக்கில் குர்து இனத்தைச் சேர்ந்த இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு, இக்கொடிய விஷத்தை பயன்படுத்துவது எப்படி என்று தனது ஆட்களுக்கு பயிற்சி அளிப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் கடந்த வாரம் கூறினார்.

இந்நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டாக்டர்களுக்கு ரிசின் பற்றி விரபங்களை சிங்கப்பூர் அரசு தெரிவித்துள்ளது. ரிசின் விஷத்தால் பாதிககப்பட்டவர்களை எப்படி அடையாளம் காண்பது என்று சொல்லித்தரப்படுகிறது. (பி)

# அடையாளப்படுத்தப்படாத நிலையில் வெடிபொருள் அபாயமுள்ள பல இடங்கள் வட – கிழக்கில் இன்னமும் உள்ளனவாம்

## யுனிசெவ் நிறுவனம் அதிர்ச்சி தரும் அறிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் வெடிக்காத நிலையிலுள்ள பொருட்கள் புதைக்கப்பட்டுள்ள ஏராளமான இடங்கள் இன்னும் இனங்காணப்பட்டு அடையாளப்படுத்தப்படாதிருக்கின்றன.

யுனிசெவ் நிறுவனமும் கண்ணி வெடி ஒழிப்புக்கான ஆசிய பசுபிக் பிராந்திய கண்காணிப்பாய்வாளர்கள் குழுவும் இணைந்து இந்த அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் நடத்திய கள ஆய்வின் அடிப்படையில் வெளியிட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

✳ இவ்வாறான நிலை வடக்கு கிழக்கில் காணப்படுவதால் சிறுவர்களும், இளம்பருவத்தினரும் பாரிய அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.


✳ 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில கண்ணிவெடிகள் பயன்படுத்தப்பட்டதாக எந்தவித குற்றச்சாட்டுகளுமே தெரிவிக்கப்படவில்லை.


✳ ஏற்கனவே புதைக்கப்பட்டு இதுவரை வெடிக்காதிருக்கும் பொருட்களே இவ்வாறு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

அரசிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே இடம்பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் கண்ணி வெடிப்பாவனை கைவிடப்பட்டுள்ளது என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு-கிழக்கில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு உட்பட பல்வேறு வெளிநாட்டு அமைப்புகள் வெடிப்பொருட்கள் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதும்,

இவ்வாறு மிதிவெடி அகற்றபபட்ட இடங்கள் பல பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)





# பிரான்ஸின் உதவி புனரமைப்புக்கு மட்டுமே உள் விவகாரங்களில் அது தலையிடாது

## இலங்கைக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாத வகையில் சமாதான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிற்கு பிரான்ஸ் உதவிகளை வழங்கும்,

இவ்வாறு பிரான்ஸ் பிரதி வெளி



விவகார அமைச்சர் றொனோபல் முசோலிகே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக கொண்ட முசோலி நாடு திரும்புவதற்கு முன்னர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,


ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் பிரான்ஸ் கலந்து கொள்வதுடன் இலங்கையின அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் நிதியுதவியினையும் வழங்கும்.

7 வருடங்களிற்கு பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது பிரான்ஸ் அமைச்சர் என்ற வகையில் இவ்விஜயம் எனக்கு மகிழச்சியை அளிக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது அங்குள்ள மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமாதானத்தை எதிர்பார்க்கிறார்கள்.

எனவே, இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் வெற்றியடைய வேண்டும்.

அத்துடன் இலங்கையின் அரசியல் அமைப்பில் திருத்தங்கள்கொண்டுவருவதற்கான ஆலோசனை வழங்க பிரான்ஸ் குழுஒன்று விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று குறிப்பிட்டார். (உ-10)



நேற்றுமுன்தினம் மானிப்பாயில் இடம்பெற்ற அடாவடித் தனத்தைக் கண்டித்து, பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் பொது மக்கள் ஒன்று திரண்டு நேற்று கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மகஜர் கைளித்தனர்.

# நிர். சேவை நியமனங்களை நிறுத்திவைக்க உத்தரவு

(கோட்டை)

அகில இலங்கை ரீதியில்போட்டிப் பரீட்சையொன்றுக்குத் தோற்றி தகுதிபெற்ற 2002ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி நடைபெற்ற நேர்முகப்பரீட்சையிலும் தெரிவு செய்யப்பட்ட 164 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதற்கு முன்பாக வடக்கு-கிழக்கிலுள்ள 117 இலங்கை நிர்வாக சேவை காலி இடங்களை நிரப்ப வேண்டாமென உச்ச நீதி மன்றம் பொது சேவைகள் ஆணைக்குழுவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளது.

முன்பு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்களால் 52 பேர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுக்கள் மீதான விசாரணைகளை முன்னெடுககவும் உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இலங்கை நிர்வாகசேவை வகுப்பு II, தரம் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த இவர்கள் தங்களுக்கு அநீதிவிளைவிக்கப்பட்டுளளதாகக் கூறி இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்களின சார்பில் ஆஜரான திரு. ஜே. சி. வெலியமுன, காலியா பீரிஸ ஆகியவர்கள் 2002 ம் ஆண்டு நேர்முகம காணப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்காமல் வடக்குக் கிழக்கிலுள்ள காலி இடங்களுக்கு 117 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படுவதை ஆட்சேபித்தனர். அவ்வாறு செய்தால் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் முதுநிலையை இழந்துவிடுவார்கள் என்று அவர்கள் கூறினார்கள். குறித்த 164பேரதும் நியமனத்தை அமைச்சரவை அங்கீகரித்திருந்தபோதிலும் திறைசேரி அனுமதியளிக்கவில்லை.

நீதிமைச்சர்கள் மார்க்பெர்னாண்டோ, டி.பி.எஸ். குணசேக்கர, பி. எதிரிசூரிய ஆகியவர்கள் அடங்கிய 'பெஞ்சி'ன் முன் மனுக்கள் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டன. விசாரணைகள் மீண்டும் ஏப்ரல் மாதம் நடைபெறும்.

இந்த மனுக்கள் விசாரிக்கபபட்டு முடிவு செய்யப்படும் வரை இந்த உச்ச நீதிமன்றத்தின் நிறுத்திவைக்கும் பணிப்புரை அமுலில் இருக்கும்.

அரசதரப்பு வழக்கறிஞர் ரஜீவ் குணதிலக்கா கருத்து வெளியிடுகை யில்,

பொது சேவைகள் ஆணைக்குழு இதுவரைக்கும் எடுக்கும் நியமனம் வழங்கி விடவில்லை என்றும் மனுக்கள் மீதான விசாரணை தொடர்வதற்கு தாம் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார். (பி.)

# தொழில் செய்வதற்கு மீனவர்கள் அச்சம்

(பூநகரி)

ஸ்ரீ லங்கா கடற்படையினரின் கெடுபிடிகளினால் பூநகரி கடற்றொழிலாளர்கள் கடலில் இறங்கி தொழில் செய்ய அஞ்சுவதாக பூநகரி கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் அ. நீக்கிலஸ்பிள்ளை கவலை தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில், இன்று நேற்றல்ல பல வருடங்களாகவே இந்நிலை தொடர்கிறது.

இவ்வாறான படையினரின் அடாவடித்தனங்களால் எமது பிரதேசத்தில் மட்டும் 7 ஆயிரத்திற்கும் அதிகமான மீனவக்குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது என்றார். (உ-10)

# வடக்கு-கிழக்கில் உள்ள கஷ்ட பிரதேச ஆசிரியர்களின் கொடுப்பனவை நிறுத்தப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கஷ்டப்பிரதேச கொடுப்பனவுகளை இடைநிறுத்துமாறு மாகாணக் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேச கொடுப்பனவே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களின் 24 வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

கல்வி,உயர் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின் பிரகாரம், 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகக் கணிக்கப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவில் எந்தவித மாற்றமுமில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (உ-8)





யாழ். பொதுநூலகத்திறப்பு விவகாரத்தில் ஏற்பட்டுள்ள இழுபறிக்கு முடிவுகாணும் வகையில் யாழ். மாநகர முதல்வர், மாநாகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று கூடிப் பேசினர். படங்கள்:பவன

## வெள்ளி முற்றம்

"கோயில் வாசல் றக்கம்...."

"கோயில் வாசல் றங்கிறவை எல்லாம் கொதியண்டு எழும்பி வாங்கோ.... அசைஞ்சு கொண்டு நீக்காதேங்கோ - எல்லாரும் வேலைக்குப் போற ஆக்கள்.... நேரம் போட்டுது... ஆச்சி! பக்கத்திலை இறங்கிறதெண்டு தெரிஞ்சு கொண்டு ஏனெணை பின்னுக்குப் போன்னி...? இதிலை எனக்குப் பக்கத்திலை நிண்டிருக்கலாமே.... கெதியா வாணை....? வயது போனா வீட்டிலை இருக்கேலாமை வெளிக்கிட்டிவியள்... இடிச்சுக் கொண்டு வாணை... அண்ணை கொஞ்சம் றங்கிப் போட்டு ஏறுங்கோ...."

"அக்கா ஏறுங்கோ.... இடம் கிடக்கு ஏறுங்கோ.... உதிலை துரை வீதியிலை கனபேர் றங்கப்போயினம்.... ஏறுங்கோவன்... மற்றக்கா... நீங்கள் என்ன சீ.ரி.பி வரும் எண்டு வாய் பாக்கிறியளே....?

அவன் இப்ப வரான்.... நல்லாக் கால் முறிய நில்லுங்கோ..."

"அக்கா கொஞ்சம் பின்னுக்குப் போங்கோ... என்ன மனச்சாட்சி இல்லாத மனிசரப்பா நீங்கள்? நீங்கள் மட்டும் போனாக்காணும்.... மற்றவை ஒருத்தரும் ஆஸ்பத்திரிக்கு... வேலைக்குப் போறேல்லை... அங்கை அதுக்குள்ளை எந்தளவு இடம் கிடக்கு... அம்மா... பஸ் போறபக்கம் பார்த்துக் கொண்டு பின்னுக்குப் போங்கோ.... இதிலை வாசல்லை எல்லாரும் என்னைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு நிண்டு என்னெய்யப் போறியள்- இல்லைக் கேக்கிறன்.."

"பிள்ளை அதிலை டிரைவருக்குப் பின்னாலை ஏறு பிள்ளை ஆ... அண்ணை மேலை ஏறுங்கோ.... புறபோட்டிலை நிண்டா பொலிஸ் காறனோடைபிரச்சினைப படோணும்... ஒரு மாதிரி ஒரு கால்வைச்சு மேலை ஏறுங்கோ...."

"ஆ.....? இல்லை இல்லை துரைவீதி இறக்கம் இல்லை றைற்...."

(மெதுவான குரலில்) "அண்ணை கெதியா எடுங்கோ-அவன் துரத்திக் கொண்டு வாறான்.."

"கோண்டாவில் இறங்கிற ஆக்கள் கெதியா வாங்கோ உள்ளுக்கை ஏறிட்டால்... பிறகு இறங்கிறேல்லை எண்டே இருக்கிறனியள்?"

"அடியிலை போய்க்கிடந்திடுவியள். கெதியா வாங்கோ.. புற்போட்டிலை இறங்கி நில்லுங்கோ... கெதியா, கெதியா...ம்...ம்... கெதியா... வேலைக்குப் போறதுகள் எவ்வளவு மன அவதியோடை நிக்குதுகள்.... நீங்கள் ஆடி.... ஆடி.... இஞ்சாலை வாணை..!. நீ விழுந்தா நான் பிடிப்பன்தானே... டக்கெண்டு இறங்கு.... றைற்...."

"ஏறுறவை எல்லாம் ஏறுங்கோ... இடம்தரலாம் ஏறுங்கோ.... அக்கா இந்தக் குழந்தைப் பிள்ளையோடை வாற அக்காவுக்கு ஒராள இடம் குடுங்கோ... என்னப்பா நீங்கள் பொம்பிளையளே...? ஒரு இரக்கம் இல்லாததுகள் அப்பா... எழும்பி எங்கை நிக்கிறதோ? இஞ்சாலை வாங்கோ.. இதிலை நான் புற்போட்டிலை அரைக்கால் வைச்சுக் கொண்டு நிக்கிறன் தானே... எல்லாம் சமத்துவம் எண்ணுவியள்.... என்னோடை இதிலை நில்லுங்கோ பாப்பம்...."

"அக்கா ஒழும்புங்கோ... உந்தச சீற்றிலை மூண்டு பேர் இருக்கேலாது. ஒழும்புங்கோ சொல்லுறன்... நீங்கள் உப்பிடிக் காலை வைச்சுக் கொண்டு இருந்தா இதிலை என்னெண்டு நிக்கிறது. பத்துப்பேர்



நிக்கிற இடத்திலை நீங்கள் ஒராள காலை வைச்சுக் கொண்டு இருக்கிறியள்... எழும்புங்கோ.. காச்சலோ? காச்சலுக்குத்தானே மருந்தெடுக்கப் போறியள்? அது மாறிவிடும் ஒழும்பி நில்லுங்கோ.."

"அம்மா கதையை விட்டிட்டுப் பின்னுக்குப் போங்கோ... பொம்பிளையளுக்கு எந்த நேரமும் கதைதான். நகைநட்டுக் கதை, சீலைக் கதை, வீட்டுக்கதை காணாதெண்டு இப்ப ஆசுப்பத்திரிக் கதை... பேந்து இறங்கி நிண்டு கதைக்கலாம்.... இப்ப இடங்களைப் பாத்துப் பின்னுக்குப் போங்கோ... உந்தக் கம்பியை ஏன் பிடிச்சுக் கொண்டு நிக்கிறியள்? அது விழாது நீங்கள் விடுங்கோ."

"என்னடாப்பா... உவன் றோட்டு முழுதும் தனக்கொண்ட மாதிரி ஓடுறான்... அருந்தப்பு....

"பஸ் எண்டாக் கெதியாத்தானே போகும். ஆறுதலாயப்பேறதெண்டால் நீங்கள் மாட்டு வண்டில்லை வந்திருக்கலாம். பின்னை என்ன கேக்கிறன்? பிறேக் பிடிச்சா முன்னுக்குப பின்னுக்கு ஆட்டுந்தானே... இந்தச் சனத்துக்கை நீங்கள் கடைசி வரையும் விழமாட்டியள்.. பயப்பிடாமல் கையை விட்டிட்டு நில்லுங்கோ..."

(இரகசியமாக) "அண்ணை கிட்ட வந்திட்டான்... கெதியா..."

"ஆர்... புறுபுறுக்கிறது...? தங்கச்சி என்ன பிரச்சினை? பஸ் எண்டா ஆக்களின்ரை கைகால் படுந்தானே.... நீங்கள் பெரிய கற்புக்கரசியள் எண்டால் தனிக்கார் பிடிச்சுக் கொண்டு போயிருக்கலாமே... சத்தம் போடாமல் நில் பிள்ளை.... இவ்வளவு பேருக்கும் முன்னாலை உன்னை ஒண்டும் செய்யேலாது... நான் நிக்கிறன்... பயப்பிடாமல் நில் பிள்ளை...."

"இனியென்ன... தாவடி வந்திட்டுது. .... ஒரு மூச்சு விடமுந்தி யாழ்ப்பாணம் வந்திடும்.... கொஞ்சம்

கொஞ்சம் தள்ளி நில்லுங்கோ... தாவடி யாரை நாங்கள் விட்டிட்டுப் போறதே.... அதுகளும் பாவந்தானே.... அம்மா ஏறுங்கோ... நானெலலோ இடம் தாறது.... கெதியா ஏறுங்கோ... ஏன் உந்தப் பெட்டி படுக்கை எல்லாம் காவிக்கொண்டு வெளிக்கிட்டனீங்கள்.... பெட்டி ஐஞ்து பேற்றை இடத்தைப் பிடிக்கப் போகுது... முன்னுக்கு இருக்கிற அண்ணை இந்தப் பெட்டியை ஒருக்கா மடியிலை வைச்சிருங்கோ... பெட்டிக்கு இரண்டு ரிக்கற் காசு தரோணும்.... ஆஸ்பத்திரிச் சாமானோ அந்திரட்டிச் சாமானோ பெட்டி பெட்டி தானே..."

"குளப்பிட்டி எல்லாம் ஒழும்பி வாங்கோ.... அம்மா கொஞ்சம் விலத்துங்கோ.... நடுப் பாதைலை நிக்கிறயள்... வாறவையை இஞ்சாலை வர விடுங்கோ... உங்கடை உடம்பும் வலு மெலிசு... அந்தச் சீற்றுக்கு இடையிலை நில்லுங்கோவன்.... மனுசறறை கால்தானே மிதிச்சது... அதுக்கேன் கத்திறியள்? மிதி வெடி வெடிச்சுக் கால் போனா என்ன செய்யப் போறியள்? இறங்கிறவை எல்லாம் புற்போட்டுக்கு வாங்கோ.... கெதியா.... கெதியா.. நான் தான் உங்களைக் கையைப் புடிச்சு இழுக்க வேண்டிக்கிடக்கு.... வாய் இல்லையே இறங்கம் எண்டு சொல்லிக் கொண்டு வாங்கோவன் ஏறேக்கை சந்தோசமாக ஏறுவியள்... பிறகு இறங்கமாட்டியள்.... அண்ணை உந்தப் பாட்டை நிப்பாட்டுங்கோ... அதுகள் பாட்டைக் கேட்டுக் கொண்டு நிக்குதுகள்... இறங்காதுகளாம்.... காசுகளை எடுங்கோ.... நான் என்ன பாங்கே நடத்திறன்... எல்லாற்றை காசும் மாத்த..? கொட்டப் பெட்டியளைக் கிளறிப் பாருங்கோ, சில்லறை அப்பிடும்.... அக்கா... மிச்சக் காசு தரச் சில்லறை இல்லை அக்கா.... இருந்தா நான் ஏன் உங்கடை காசைக கொண்டு போறன்? இறங்குங்கோ இறங்குங்கோ... ஒரு ஐந்து ரூபா மிச்சக் காசுக்கு இப்பிடி நிண்டு அடிபடுறியள்... காசைக் கண்ணிலை காணாத ஆள் மாதிரி... எப்பதான் இதுகள் திருந்தப் போதுகளோ தெரியாது...."

"ஏறுங்கோ... ஏறுங்கோ... இப்போதைக்கு இந்த றோட்டிலை பஸ் ஒண்டும் வராது. உங்களை என்னெண்டு விட்டிட்டுப் போறது? ஒரு மனச்சாட்சி வேண்டாமே? ஏறுங்கோ... அக்கா... உங்களைத் தான்.... என்ன சீ.ரி.பி யைப் பாத்துக் கொண்டே நிக்கிறியள்..... நாளைக்கு எங்கடை பஸ்ஸை மறிப்பியள் தானே... அப்ப பாப்பம்..."

"அண்ணை றைற்......"

"அக்கா உதிலை இஞ்சின் பெட்டியிலை இராதேங்கோ சுடும் உங்களுக் காண்டித்தான் சொல்லுறன ஒழும்பி நில்லுங்கோ... பஸ் போற பக்கம் திரும்புங்கோ..."

"இல்லைஅண்ணை முன்சீற்றுக்கு போகாதேங்கோ அதிலை மூண்டு போர் இருக்கோலாது. அண்ணை கியர் போடேலாது கொஞ்சத்தூரம் தானே... நில்லுங்கோ... தலை சுத்துதோ... விழமாட்டியள் பயப்பிடாதேங்கோ..."

"இறங்கம் இல்லை....றைற்.."

"அடுத்த ஹோல்ற் இறங்கிறவை எல்லாம் காசுகளைக் கையிலை எடுத்துக் கொண்டு வாங்கோ... இனிமேல்தான் கொட்டப்பெட்டியள் திறப்பியள்... பஸ்சுக்கை ஏறேக்கை காசைக் கையிலை கொண்டு வ்ர ஏலாதே!"

"தங்கச்சி... கண்ணாடி யோடை

**கோகிலா மகேந்திரன்**

சாயாதை.... கண்ணாடி உடைஞ்சு கையிலை குத்தப் போது...."

"கொக்குவில் பள்ளிக்குடம் இறங்கிறவை கெதியா வாங்கோ. பிள்ளை ஆறு ரூவா பிள்ளை... ஆளைப்பாத்தாக் கலியாணம் செய்யிற வயது மாதிரிக் கிடக்கு... என்ன பிள்ளை அரை ரிக்கற் எண்றாய்... எடு பிள்ளை... யூஸ் வாங்க வைச்சிருக்கிற காசை எடுத்து விடு பிள்ளை வெளியாலை..."

"ஆச்சி.... பெட்டி தருவன்... நான் என்ன கொண்டேபோப்போறன்? அண்ணை அந்தப் பெட்டியை ஒருக்காத் தாங்கோ... அதில்லை - மற்றப் பெட்டி.. பிடி....பிடி... கெதியா... பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு நேரம் போட்டுது..."

"ஏறுங்கோ... ஏறுங்கோ... தம்பி.. இடிச்சுக் கொண்டு போ பின்னாலை ...."

"ஆரது... சத்தி வருதோ? யன்னலுக்குள்ளாலை தலையை வெளிலை நீட்டு பிள்ளை! அட... வ்ாகனம் வருதோ எண்டு பாத்தெல்லோ நீட்டோணும்... அருந்தப்பு... தலை பறந்திருக்கும் இப்ப..."

"ஆ... றக்கம்... ஆச்சி இறங்கணை கெதியா.... ஆ.... ஆ.... என்னெணை ஏன் விழுந்தினி? அது வளர முந்தி மாறிடும் ஒழும்பு... ஒழும்பு... றைற்...."

(உரப்பு மிகவும் குறைந்த குரலில்) தட்டா தெருவோடை முந்தட்டும் விடுங்கோ... பிறகு சனம் நில்லாது...."

"அண்ணை உவன் துர்க்கா எங்கினேக்கை போறான்... ஆ...ஆ... பிழையில்லை....."

"சிவலிங்கப் புளியடி இறக்கம் இருக்கோ? உங்கினை பின்னுக்கு நிண்டு அனுங்காமல் வெளிக்கிட்டு வாங்கோ... இந்த நூறு ரூவாத் தாளுகளைக் கொண்டு ஏன் வெளிக்கிர்றனியள்? நீங்கள் பணக்காறர் எ்ண்டு காட்டவோ? கொண்டாங்கோ... இரண்டு ரூவா சில்லறை இல்லை.. பிடியுங்கோ நூறு ரூவாயைத் தந்திட்டுப் பேந்து ரண்டு ரூவா வேண்டிறதுக்கும் அடிபடினம்..."

"பொம்பிளையளுக்கு வாய் கூடிப்போச்சு...."

"சரி...சரி... பட்டணம் வந்திட்டுது... ஆறுதலா ஒவ்வொருத்தரா காசுகளையும் எடுத்துக் கொண்டு வாங்கோ பாப்பம்... என்ன அவசரமப்பா? பட்டணத்தைக்கண்டோணணை ஏனப்பா அவசரப்பார்றியள்? இருங்கோ. இருங்கோ.... இப்பென்ன ஆரோ செத்துப் போட்டினமே... ஒராள ஒராளா வாருங்கோ... அக்கா கொஞ்சம் அவசரப்படாதேங்கோ... ஒரு நாளைக்கு வேலைக்குக் கொஞ்சம் பிந்திப் போனா என்ன வேலை போடுமே? ஆஸ்பத்திரிலை பின்னேரம் மட்டும் மருந்து குட்பினம்... அமமா கொஞ்சம் நில்லுங்கோ.. எங்கை ஏறின்னீங்கள்... சுன்னாகமோ.... ஆம்பிளையளை விட்டிட்டு வாறன் பொறு பிள்ளை... பள்ளிக் குடத்திலை போய் இப்ப பி.ரி. தானே செய்யிறது.... நில் வாறன்...."

அப்பாடா.... இதுகளோடை நான் படுறபாடு.... பெரியபாடு...."

"அண்ணை ஏன் இருக்கிறியள்? பஸ்ஸாலை இறங்கேல்லை?"

"தம்பி.... நான் ஒரு டொக்டர். வெளிநாட்டிலை இருந்து வந்தனான என்ரை சொந்த இடம் யாழ்ப்பாணம் தான். போர் நெருக்கடியள் இதுகளாலை உள ஆரோக்கியம் பாதிக்கப்பட்ட எங்கடை சனத்துக்கு ஏதும் உதவி செய்திட்டுப் போக வந்தனான்.. உளநலம் பாதிக்கப்பட்டவையை வைச்சுப் பராமரிக்க ஒரு இல்லம் கட்டிக் குடும்பம் எண்டு யோசிச்சுக் கொண்டு வந்தனான்.... இப்ப... இதிலை வந்தாப் பிறகு.... உமக்கு முதல்லை உதவி செய்வம் எண்டு நினைக் கிறன்...."

"எனக்கோ? அப்ப எனக்குச் சொந்தமா ஒரு மினி பஸ் வேண்டித தாறியளே.... ஓடுவம்?"

## காதலர் தினத்தில் பூத்த கவிதைகள்

### காதல்

உன்னத உணர்வின் இணைப்பாய்
உயிர்களின் பரிவுத் துடிப்பாய்
இன்னிசைப் பாடல் மெட்டாய்
இதமாயத் துடிப்பது காதல்!

நம்பிக்கை வேரின் பிடிப்பில்
நல்லதோர் உறவாய் ஆகி
தும்பிக்கை போன்ற பலமாய்
துணையாய் இருப்பது காதல்!

மனங்களின் தெய்வீகப் பற்றில்
மாசுகள் அறவே அழித்து
இனமத இட வேறுபாடின்றி
இதமாய் இணைவது காதல்!

சின்னச் சின்னப் பரிசுகளில்
சிறப்புகள் நிறைவாய்ப் பெற்று
அன்பின் ஊற்றில் நனைந்து
ஆயுளை வளர்க்கும் காதல்!

வாழ்வின் பாதையை செதுக்கி
வண்ண நாட்களைப் பிறப்பிக்கும்
வசந்த உறவே காதல்
வாழ்த்துவோம் காதலர் தினத்தை!

சூரியதிலா,
ஈச்சமோட்டை.

### காதலர்க்கோர் கடிதம்



காதலரே! கேளீர்
காளை களாய் வளர்கின்றீர் துள்ளுகின்றீர்
காதலிலும் மோதலிலும் மூழ்குகின்றீர்
வேளை என்ற இறப்பு வந்து கொத்தும் முன்னர்
வியனுலகில் நம்பெயரைச் செதுக்க வேண்டும்
அன்னையென்றும் தந்தையென்றும் இருவர் சேர்ந்தே
அல்லிரவில் எழுதி வைத்த 'கவிதை' நீங்கள்
பின்னர் வரும் உலகத்தார் உமைப் படிக்க
பெருமை மிகு காவியமாய் ஆக வேண்டும்.

– மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்.

### இனிதே மலரட்டும்

மானிடர் எமக்கு காதலர் தினமுண்டு
இதைக் கட்டி எழுப்ப
ஆண் பெண் இருவருண்டு
ஆதி காலம் முதல் இக்காலம் வரை
இரு உள்ளங்கள் ஒன்று சேர்வதே
இருதலைக் காதல் – இதை
இத்தினமே இன்பமாய்க் கொண்டாடி
இணையா உள்ளங்கள் இன்றே இணைந்
காதலர் தினம் இனிதே மலர்ந்து
காதல் தேசம் மிளிரட்டும்.

எஸ்.எஸ். சிவகுமார்,
மிருசுவில் வடக்கு.

### மகத்தான காதல்

உள்ளத்தால் உயர்ந்த காதல்
உயிரோடு கலந்த காதல்
நெஞ்சத்தில் பதிந்த காதல்
நீண்டநாள் நிலைக்கும் காதல்
பூப் போன்ற காதலை நாம்
புனிதமாய் நினைப்போமாயின்
மாசற்ற காதலது; என்றுமே
மறைவதில்லை
மகத்தான காதலை நாம்
மனதார வாழ்த்தி நிற்போம்

அ. தில்லைநாயகி.
பொலிகண்டி.

### வரம் வேண்டும்!

மீண்டும் பிறப்பு
உண்டேல்
அன்பே!
உன்னைக்
காணாத வரம்
வேண்டும் - மீறிக்
கண்டு விட்டால்
இந்நாளில்
உன்னை
மறவாத - வரம்
வேண்டும்.

~ சுஜத்தா





### என்றுமே நிலைப்பது காதல்

உள்ளத்தின் ஆழ்த்தில் எழுவது காதல்
உயிர்போன பின்னாலும் இருப்பது காதல்
கள்ளமனம் கொண்டவனை திருத்திடும் காதல்
கடல்தாண்டி மலைதாண்டி வருவது காதல்
முகமது பார்க்காது மலர்வது காதல்
உலகத்தில் மனிதரை உயர்த்திடும் காதல்
எதிர்ப்புகள் வர வர வளர்வது காதல்
என்றுமே உயிரோடு வாழ்வது காதல்

கி. அ. தில்லைதாசன்.

### இன்ப வேதனை

என் கவிதைகளின் கருப்பொருளே!
என் கண்களின் ஒளியே!
புரியாதா என் அன்பு?
அறியாயா என் சோகம்
காதல் ஒரு இன்ப வேதனை
என்றுதான் நினைத்தேன்
நினைக்கவில்லை அதுவே
இந்நாளில் எனக்கு
விஷமாகும் என்று.....!

T.சுஜி, நல்லூர்.

# காளத்தியப்பரின் காட்சி பெற்ற கண்ணப்பர் ஒப்பற்ற அன்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாவார்

''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கணடபின்'' என்று மணிவாசகர் ஏங்கு கிறார். வேட்டுவகுலத்தில் பிறந்தும் காளதநாதரின் நாமத்தை கேட்டும், குடுமித்தேவராகிய மூர்த்தி அவன் இருக்கும்வண்ணத்தைக் கண்டும், அப்பெருமானுக்கே பிச்சி ஆனவர். அன்பு மயமாகி,ஆறுநாளில் சித்தி பெற்றவர்.'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்'என்று போற்றுகிறார் சைவ சமயகுரவராகிய சுந்தரமூர்த்திநாயனார். குலமிலரா கிலும் குலத்துக்கு ஏற்பதோர் நலம் மிகக கொடுக்கும் இறைவன 'நில்லு கண்ணப்ப, நில்லுகண்ணப்ப, என் அன்புடைத்தோன்றால், நில்லு கண் ணப்ப' என்று கண்ணிடந்து அப்பிய கணணப்பரின் கைகளைப் பிடித்தார் என் கிறது பெரிய புராணம். கண்ணப்ப நாயனார் புராண சூசனத்தில் நாவலர் இறை அன்பின் பெருமையை உச்ச மாக விளக்குகிறார். 'அன்பின் வழி யது உயிர் நிலை' (குறள்) அன்பு என்ற ஊற்றுவற்றிவருகின்ற இன் றைய உலகில் அன்பின் பெருமையைப பற்றிச் சிந்திப்பது நம்மை மனிதராக வாழ வழிசெய்யும்.

''திருக்களிற்றுப்படியார்'' என்பது பதினான்கு சைவசித்தாந்த சாத்திர நூல்களுள் ஒன்று.ஞான அனுபவப் பிழிவு அது.அதில் 52 ஆம் பாடல் கண்ணப்பரின் அன்பைப் பற்றியது. அதன் சாரம் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை என்று மாணிக்கவாசகர் அருளச் செய்தபடியால், அந்த அன் பைக் கண்ணப்பநாயனாரும் காளத தியப்பரும் அறிவாரே அன்றி, மற்றவர் யாரும் அறியார்'' என்பதாகும்.

எப்படி அன்பு செய்ய வேண்டும் என்ற முறையை உதாரணம் காட்டி விளக்குகிறார் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார்.

### இறைபணி

சேககிழார் பெருமான் அகக்காட்சி யால் நேரே கண்டுபாடிய பெரிய புராணத்தில் வருகின்ற நாயன்மார் கள் அறுபத்துமூவருக்கும் பொதுத் தன்மை. அவர்கள் இறைபணி நின்ற வர்கள என்பது பணி என்பது உடைய வரைக் கண்டு ,கேட்டுச்செய்வது. மீளா அடிமைகளாகிய உயிர்கள் தம்மை உடையநாதனைக் காண வேண்டும்.கண்டு அவர் திருச்சித் தத்தை அறிந்து பணி செய்ய வேண்டும்.காணாமல் நூல்கள் கூறும வழியில் பணி செய்வது ஆரம்ப நிலை. அது உண்மைப்பணக்கு வழி வகுக்கலாம். தலைவனைக் காண

**வெள்ளி நற்சிந்தனை**

வேண்டும் என்ற ஆசையைத்தூண் டலாம் ஆனால் கண்ட பிறகு தான் உண்மைபபணி தொடங்கும்.ஊனக் கண்ணால் உணர முடியாத பதியைக் காண்பதற்கு ஞானக்கண் திறக்க வேண்டும்.

உயிர் அறிவைப் பெறுவதற்கு- ஐம்புலன்களின் வழியே உள்ளே வரும் அறிவுப்பதிவுகளை ஏற்று வகைப்படுத்தும் உட்கருவிகள் நான்கு. அவை அகங்காரம், புத்தி, மனம், சித்தம் என்பவை. உள்ளக்கண் திறந் தால் நேரே சந்தேகமில்லாமல் பார்க்க முடியும். அவர்கள் தான் பணி செய்யத்தெரிந்தவர்கள். நேரில் கண்டு கேட்டுச் செய்வதுதான் பணி. கற்பனையால் ஊகத்தால் செய் வது பணிஆகாது.

கண்ணப்ப நாயனார் செய்தது உண் மைப் பணியாயிற்று. சிவ கோசரி யார் ஆகம முறைப்படி செய்த பூசை யிலும் வேடரது அன்பு வழி செய்த பூசை உண்மையான பூசையாயிற்று. அதனால் அவர் இறைவனைக் கணடார். ஆறு நாளில் சாதனை முற் றுப்பெற்றுச்சித்தி பிறந்தது. சிவனும் சீவனும் ஐக்கியமாயிற்று.

### வேட்டுவனுக்கு வந்த ஞானம்

இம்மகத்தான சாதனை செய்யும் திறன் எப்படி வேட்டுவக் குமாரனுக்கு வந்தது. எத்தனையோ கோடிபிறப்பு எடுத்துச் செய்த பூசனையின் பயனா கத்தானே ஞானம் தோன்றும் இவ் வேட்டு வததிண்ணனாருக்கு எப்படி அது கை கூடியது.

ஆன்மாதான் மும்மலமாகிய அழுக் கைப்போக்க எண்ணில்லாத பிறவி களில் அடைந்தபக்குவம் கார ணமாக ஒரே பிறப்பில் முத் தியடையலாம். இதற்கோர் கதையு முண்டு. திருக்காளத்திப் புராணம் கண்ணப்பசருக்கத்தில் கூறப்படும் கதை இது. 'அருச்சுனருக்குப் பாசுபதம் கொடுத்தான்' என்று இறைவனை தேவாரம் பாராட்டு கின்றது. அந்த அருச்சுனனுடைய தவத்துக்கு இரங்கி அருள்புரிய மானிடச்சட்டை சாத்தி வந்தார் கைலையப்பர். வேத நெறிநின்ற சிவ பூ சாதுரந்தரன், தான வழிபடும் பரம் பொருள் உருவத்திரு மேனி தாங்கி வரும் போது வேதம் கூறும் காள கண்டமும் திரிநேத்திரமும் உடைய தாய் வரலாரென எதிர்பார்த்தான். அவருடைய திருவிளையாட்டு வேறு விதமாயிருந்தது.

பன்றியின் பின் செல்லும் மாயத் தைச் செய்தார். இந்த பெரிய தவசி ரேஷ்டனுக்கு அப்படியொரு உள் உணர்வு கூறியிருக்காதா. தம்முன்னே நிற்பவர்வெறும் வேட்டுவன் அல்லர். சாக்ஷாத் பரமேசுவரனே என்று 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறினான் போலும். சந்திர குலத்து அரச வம்சத்தில் தோன்றியவன் நான் என்ற பிறப்பினால் வந்த கர்வம் கண்ணை மறைத்ததோ? நான், எனது என்னும்செருக்குப்போக வில்லை. அது போக காண்டீபத்தின் நாணை வெட்டினார் வேடர் வேடம் போட் டவர். ஆத்திரம் கொண்டு வில்லால் அடித்தான். வேட்டுவப் புற உரு வத்தில் வந்தவரை மதிக்காத மோகம் மதம் என்ற உட் பகை செற்று அவனை ஆட்கொள்ள இறை திரு வுள்ளத்தில் அவன் வேட்டு வனாய் பிறந்தே குறை முடித்து வீடுபெற

**அவைமணி**

வேண்டும் என்ற குறிப்பு எழுந்தது போலும். வீரத்தின் பெரு மையில் உச்சந்தலையடி விழுந்த போது சுடலை ஞானம் வந்து வீடு அருள்க என்று கேட்ட வனைதவஞ் செய்த சங்கற்பம் என்ன? போரில் வெல்ல ஆயுதம் பெறுவதல்லவா?ஏன் சங்கல்பத்தை மாற்றுகிறாய் என்று பரமசிவன் பாசுபதமே கொடுத்து அனுப்பினார். திண்ணனார் ஞானப் பாதையாகிய மலைஏற்றத்தின் போது பந்தங்கள் எல்லாம் கழன்ற நிலை யில் சிவ-சீவ சந்திப்பில் இதைத் திரை ஏதும் மறைக்க வில்லை. அன்னை யையும் அத்தனையும் அன்றே நத்தார். அகன்றார் அகலிடத்தார் ஆசாரத்தை. தன்னை மறந்தார். தன் நாமம் கெட்டார். தலைப்பட்டார் தலைவன் தாளில்.

கண்டு பணி செய்த கண்ணப்பர் தாள் வாழ்க. காணாமலே சிவப் பணிசெய்கிறோம் என்று பேசும் நம் அறியாமை ஒழிக.

## நிர்வாக சபை தெரிவு

(தனங்கிளப்பு)

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தி யோக த்தர் நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்ற போது, தலை வராக எஸ்.ராஜ்மோகனும், செயலாளராக எஸ். சிவரூபனும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-37)

## மெய்வல்லுநர் திறனாய்வு

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் திற னாய்வு இன்று வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணிக்கு பாடசாலை மைதா னத்தில் அதிபா அ.அகிலதாஸ் தலை மையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில், கோப்பாய் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் பிரதம விருந் தினராகக் கலந்து கொள்வுள்ளார்.(உ)

## ஹெரோயின் விற்ற பெண் கைது

(கொழும்பு)

மட்டக் குழிப்பிரதேசத்தில் ஹெரோ யின் போதைப்பொருள் வர்த்த கத் தில் ஈடுபட்டு வந்த பெண் ஒரு வரை போதைவஸ்து ஒழிப்புப்பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இப் பெண்ணிடம இருந்து 50 ஆயி ரத்துக்கும் அதிகமான பெறுமதி உடைய ஹெரோயின் மீட்கப்பட்டது.

இப் பெண்மணிநீண்டகாலமாக இவ் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (உ-8)

## களவாக இத்தாலி செல்ல முயன்ற இலங்கையர் 46 பேர் கைது

(கொழும்பு)

சடடவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 46 இலங்கையர்களை தங்காலைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மாத்தறை குடாவெல மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை இரண்டு மணியளவில் ட்றோலர் படகு ஒன் றின் மூலம் இவர்கள் அனைவரும் புறப்பட்டுச் செல்லும் வேளையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழுமபு,நீர்கொழும்பு, வென்னப் புவ,சிலாபம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்விதம் இத்தாலி செல்லமுயன்றவர்கள் என விசாரணை கள் மூலம் தெரியவந்துள்ளது.

தங்காலைப் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வில்லி அபயநாயக்கா இக் கைது தொடர் பாக கருத்து தெரிவிக்கையில,

கைது செய்யப்பட்ட 46 இலங்கை யர்களும் நீர்கொழும்புப் பகுதியில் தங்கவைக்கப்பட்டு மோட்டார் வாகனம் ஒன்றின் மூலம் மீன் பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

இவாகள் ஒவ்வொருவரும் முகவர் களுக்கு தலா 5 இலட்சம் ரூபாவை காசாகவும் பொருளாகவும் கொடுத் துள்ளனர்.

தங்காலைப் பொறுப்பதிகாரி என்.கே. பிறேமதிலக தலைமையி லான குழுவினர் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (உ-8)

## முன்பள்ளி கல்வி மேம்பாட்டு பேரவை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முத்திரைச்சந்தி,செம்மணி வீதியில் அமைக்கப்பட்ட யாழ் மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலை யத் திறப்புவிழா கடந்த திங்களன்று வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப் பாளர் சிவநேசன் தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக தமிழீழத் தேசி யக் கொடியை யாழ்.மாவட்ட அரசி யல் துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதியும்,தமிழர் புனர்வாழ்வுக் கொடி யினை கழகத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் வரனும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியினை யாழ். மாவட்ட முன்பள்ளி கல்வி மேம் பாட்டு நிலைய இணைப்பாளரும் ஏற்றி வைத்தனர்.

அடுத்து பெயர்ப்பலகையினை. சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்டப் பணிப்பாளர் அலிஸ்ரர்கிக் திரை நீக்கம் செய்து வைக்க,பொதுச் சுடரினை மாகாண மேலதிகக் கல்விப் பணிப் பாளர் திருமதி மகாலிங்கமும் பங்குத் தந்தை ஜோர்ச் அடிகளும் உளளூராட்சி உதவி ஆணையாளர் கிருஸ்ணசாமியும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து நிலையக் கட்டடத்தை யுனிசெவ் நிறுவனத் திட்டப்பணிப் பாளர் செலின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அக வணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரமபமாகின. வரவேற்புரையை யாழ்ப் பாண வலய ஆரம்பக் கல்விப்பிரிவு கல்விப் பணிப்பாளர் திருமதி யோக ராசா நிகழ்த்தினார். (உ)

## முனியப்பர் ஆலயச் சூழலில பாதீனிய செடிகள்

(மண்கும்பான்)

யாழ்.துரையப்பா விளையாட் டரங்கு மற்றும் அதனை அண்டிய முனியப்பர் ஆலயப் பகுதியில் பாதீனி யக் களைகள் பெருமளவில் வளர்ந்து காணப்படுகின்றன.

இவற்றை உடனடியாக அகற்ற யாழ் மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென முனியப்பர் ஆலய பரிபாலன சபை வேண்டுகோள் விடுத் துள்ளது. (உ-55)

## எயிட்ஸ் தடுப்புத் திட்டத்திற்கு உலக வங்கி 120 கோடி வழங்கும்

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டங்களை அமுல் செய்ய உலக வங்கி 120 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இந்நிதி சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.

இதேவேளை,எயிட்ஸ், காசநோய், மலோயா போன்ற நோய்களை தடுக் கும் திட்டங்களிற்காக இவற்றை கட் டுப்படுத்தும் சர்வதேச நிதியத்தில் இருந்து மேலும் 60 கோடிக்கும் அதிகமான தொகைகிடைக்கவிருப் பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அரசாங்கமும் தனது பணத்தில் இருந்து 33 கோடி ரூபாவை இதற்கென ஒதுக்கவுள்ளது. (உ-10)

## ஆசிரியர் சம்பள அதிகரிப்புக் கொள்கைகள் மீளாய்வு

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பை வழங்குவது சம்பந் தமாகவும் அவர்களது கடமைகளை மதிப்பீடு செய்வது தொடர்பாகவும் கடைப் பிடிககப்படும் கொள்கைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

கல்வி அமைச்சு சமீபத்தில் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத் தில கடமை மதிப்பீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களுக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பு வழங்க வேண்டாமென அறிவிக்கப்பட்டிருந் தது.

இலங்கைச் சுதந்திர ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் இது தொடர் பாக் கருத்து வெளியிடுகையில்,

இன்னும் இரு வார காலத்தினுள் இந்தச் சுற்று நிருபத்தை மீளாய்வு செய்ய கல்வித்துறை அதிகாரிகள் இனங்கியுள்ளனர்.

கடமை மதிப்பீட்டுத்திட்டம ஒழுங் கான முறையில் கடைப்பிடிக்கப் படும் வரை வருடாந்த சம்பள அதிகரிப் புக்கான பரிந்துரைகளை இடை நிறுத் துமாறு தொழிற்சங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

சுற்று நிரூபம் இரண்டு வார காலத் தினுள் மீளாய்வு செய்யப்படா விட் டால் ,அதிக எண்ணிக்கையான ஆசிரி யர்கள் வருடாந்த சம்பள அதிகரிப் பினை பெற முடியாதிருக்கும் எனத் தெரிவித்துள்ளார். (உ-8)

4 இலட்சத்து 65 ஆயிரம் அமெ.டொலரை

## மிதிவெடி அகற்றல் திட்டத்திற்கு நெதர்லாந்து அரசு வழங்கியது

(கொழும்பு)

யாழ். குட்டாநாட்டில் புதைக்கப் பட்டுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கென நெதர்லாந்து அரசாங்கம் 4 இலட்சத்து 65 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள் ளது.

ஹலோ றெஸ்ட் நிலக்கண்ணிவெடி அகற்றும் அகழ்வுத்திட்டத்தின் கீழ் இந் நிதி பயன்படுத்தப்படவுள்ளது என இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகம் விடுத்துள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத்திட்டம் இவ் வருட இறுதிக் குள் பூரணப்படுத்தப்படும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வுக்கும்,நெதர்லாந்து அபிவிருத்தி கூட்டுறவுஅமைச்சருக்கும் இடை யில கடந்த வருடம் நியூயோக்கில் நடை பெற்ற பேச்சு வார்த்தையின் பயனாகவே இந் நிதி வழங்கப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (உ-8)

## அங்கீகாரம்பெறாத பன்றி இறைச்சி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 5ஆம் திகதி கொட்டடிச் சந்தையில் அங்கீகாரமற்ற பன்றி இறைச்சி விற்பனை செய்யப்படுவதா கக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து அங்கு பொதுச்சுகா தாரப பரிசோதகரர்கள் நேரில் சென்றனர். இதைக் கண்ணுற்ற பன்றி இறைச்சி வியாபாரிகள் இறைச் சியைக் கைவிட்டுச் சென்றுவிட்ட நிலையில்அப்பன்றி இறைச்சிக்கு எவரும் உரிமை கோராதபடியினால் அழிக்கப்பட்டதாகவும்இவ்வாறான இறைச்சியை வாங்கி உண்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டா ம.மரியதாசன் பொது மக்களைக்கேட்டுள்ளார். (உ)

## இன்று ஒரு தகவல்

# படிப்பும் புத்தியும்!

ஒரு மாணவனைப்பார்த்து ‘‘என்னதம்பி! படிப்பெல்லாம் எப்படியிருக்கிறது?’’ என்று விசாரித்தேன். அவன் மிகவும் அலுத்துக் கொண்டான். ‘‘நான் நன்றாகத்தான் படிக்கிறேன்... இருந்தாலும் புத்தியில் சரியாக ஏறமாட்டேன் என்கிறது சார்!’’ என்றான். சரி! இவனும் நமது ரகம் என்று முடிவு பண்ணிக் கொண்டேன். கல்விகற்கக் கூடிய ஒரு மாணவன் சம்பந்தப்படுகின்ற புத்திகள் பலவகை. அதைப்பற்றி வாரியார் சுவாமிகள் விளக்கியிருக்கிறார்.

மிருத்து புத்தி என்று ஒன்று! ‘மிருத்து’ என்றால் மண்! மண் சுவரில் ஆணி அடிப்பதும் சுலபம். அதைப் பிடுங்கி எடுப்பதும் சுலபம். அதுமாதிரிச் சிலர் குரு சொல்லிக் கொடுப்பதைச் சுலபமாகக் கேட்டுத்தெரிந்து கொள்வார்கள். கொஞ்ச நேரத்தில் சுலபமாக மறந்தும் விடுவார்கள். இது மிருத்துப் புத்தி. ‘தாரு’ புத்தி என்று ஒன்று! ‘தாரு’ என்றால் மரம் அதில் - பச்சை மரத்தில் ஆணி அடிப்பது சுலபம். ஆனால் அதை எடுப்பது கஷ்டம். அதுமாதிரி ஆசிரியரிடம் கேட்டதை கவனமாக மனத்தில் பதிய வைத்துக் கொண்டு அதை மறக்காமல் இருப்பது தாரு புத்தி!

பட்ட மரமாக இருந்தால் அதில் ஆணி அடிப்பதும் கஷ்டம், அடிக்கிற ஆணியும் சீக்கிரம் நழுவிவிடும். அது மாதிரி கேட்கிற விஷயம் மனதிலே பதிவதும் கஷ்டம்! அப்படியே பதிந்தாலும் அது நீடித்து இருப்பதும் கஷ்டம். கொஞ்சக் கலத்தில் மறந்து விடும்! இன்னொருவகை புத்தி உண்டு! அதற்குப் பெயர் ‘சிலா’ புத்தி. சிலா என்றால் கல். ஒரு கருங்கல்லில் நான்கு துளையைப் போட்டு ஒரு துளையில் உளியை வைத்து அடித்தால், மற்றைய துளை வழிகள் யாவும் பிளந்து கல் இரண்டாகிவிடும். அது மாதிரி சந்தியான இடங்களில் குறிப்பான ஒரு பொருளைச் சொன்னால் அதைக் கொண்டு மற்றவர்களையும் தெரிந்து கொள்வது சிலா புத்தி.

வேணு புத்தி என்றால் என்ன தெரியுமா? வேணு என்றால் மூங்கில். மூங்கில் கணுவில் ஒரு பக்கம் உளி வைத்து அடித்தால் இரண்டு பக்கமும் பிளந்துவிடும். அது போன்று ஒரு செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கிறபோதே அதன் முன் - பின் தொடர்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதுவே வேணு புத்தி.

தைல புத்தியென்று ஒன்று உண்டு. தைலம் என்பது எண்ணெய்! தண்ணீரில் ஒரு துளி எண்ணெய்யை விட்டால் அது தண்ணீர் முழுவதும் பரவுவது மாதிரி, ஆசிரியர் சுருக்கமாக ஒரு கருத்தைச் சொன்னால் அதைவைத்துக் கொண்டே முழு விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்! அது தைல புத்தி. கற்பூர புத்தி - கற்பூரம் தீப்பட்டவுடனே பற்றிக் கொள்கிறது. ஆசிரியர் சொன்னவுடனே நுண்ணறிவோடு பாடங்களைப் புரிந்து கொள்வது இந்தவகைப் புத்தி.

கரிப்புத்தி என்று ஒன்று. அது எப்படியென்றால் கரியில் நெருப்பை வைத்து விசிறிய பிறகு கரிநெருப்பாகும். அது மாதிரி காலை - மாலை வேளைகளில் ஆசிரியர் வந்து பாடம் சொல்லிக் கொடுப்பார். அதைக் கொண்டு புரிந்து கொள்வது இந்தவகை. கதலித் தண்டுப் புத்தி என்று கூட ஒரு வகை உண்டு. கதலி என்பது வாழைமரம். வாழைத்தண்டில் தீ வைப்பது எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமத்தோடு கல்வி கற்பது கதலித்தண்டுப் புத்தி.

இதைத்தவிர இன்னும் சில வகையாகக் கூட மாணவர்களை இனம் பிரிப்பது உண்டு. ஆசிரியர் சொன்னவற்றில் நல்லதை மட்டும் எடுத்துக் கொள்கிறவன் அன்னம். ஆசிரியர் கிடைத்த இடத்தில் பாடத்தைக் கேட்டுக் கொண்டு பிறகு தனியாக உட் கார்ந்து சிந்தித்துப் புரிந்து கொள்பவன் பசு. பசுமாடு அப்படித் தானே புல்லைக் கண்ட இடத்தில் மேயும் அதன் பின்னர் நிதானமாக அசைபோடும். ஆசிரியர் சொன்னதைத்தவிர வேறுஎதையும் சொல்ல முடியாதவன் கிளி.

பல இடங்களில் பாடல்கேட்டு கடைசியில் ஒன்றும் புரியாமல் போகிறவன் ஆடு! ஆடு ஒரு செடியில் வயிராற மேயாது! இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்று அங்கும் இங்கும் அலையும் சிலருக்கு எருமை என்று பெயர். எருமை குளத்து நீரைக் கலக்கித்தான் குடிக்கும். அது மாதிரி ஆசிரியர் மனதை நோகச் செய்து பயில்கிற மாணவர்கள் எல்லோரும் இந்த ரகம். இவ்வளவெல்லாம் இருந்தாலும் இந்தக் காலத்து மாணவர்கள் எல்லோரும் ஒரு தனி ரகம்:

ஒரு ஆசிரியர் வகுப்பிலே பாடம் நடத்திக் கொண்டிருந்தார். இலக்கண வகுப்பு. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவற்றைப் பற்றிப் பாடம் சொல்லிக்கொடுத்துவிட்டு ‘‘இப்போது நான் ஒரு வாக்கியம் சொல்லுவேன் அது என்ன காலம் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும்’ என்றார் ஆசிரியர். ‘சரி’ என்றார்கள் மாணவர்கள்.

‘‘நான் நாளைக்கும் பாடம் நடத்தப்போகிறேன்! இது என்னகாலம்?’’ என்று கேட்டார் ஆசிரியர். ஒரு பையன் மெதுவாக எழுந்தான் ‘இது எங்களுடைய போதாதகாலம் சார்’ என்று சொல்விட்டு உட்கார்ந்தான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

---

## ஜனாதிபதியின் உத்தரவு உதாசீனம்

# குற்றச் சாட்டை மறுக்கிறார் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

நெடுந்தீவில் அண்மையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களைப் பாதுகாப்புஅமைச்சர் திலக்மாரப்பன மறுத்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா, பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவுக்கும், கடற்படைத் தளபதிக்கும் விளக்கிக் கூறியிருந்தார்.

அத்துடன், இவ்வாறான சம்பவங்களின் போது கைது செய்யப்படும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களிடம் இருந்து வாக்கு மூலம் பெற்றபின் அவர்களை விடுதலை செய்யுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், அவரின் உத்தரவுகளைப் பாதுகாப்பு அமைச்சர் ஊதாசீனம் செய்துள்ளார் என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

மேற்படி கருத்தக்களையே பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன மறுத்துள்ளார்.

ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸினால் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கூறப்பட்டவை குறித்து, கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்புஅமைச்சர்,

நெடுந்தீவுச் சம்பவம் குறித்து அன்றைய தினம் இரவு 10.30மணி முதல் 11.30மணி வரை ஜனாதிபதியுடன் நான் தொலைபேசியில்உரையாடினேன்.

அவ்வேளையில், இரண்டாவது தடவையாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் படகினை சோதனையிட்டுள்ளனர் என ஜனாதிபதிக்கு நான் கூறினேன்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி எனக்கு எந்த வித உத்தரவினையோ, அன்றி ஆலோசனைகளையோ வழங்கவில்லை.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கூறப்பட்டவை உண்மைக்குப் புறம்பானவை என்றும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-8)

---

# மாணவத் தலைவர்களிடையே சிறந்த தலைமைத்துவம் பேணப்பட வேண்டும்

## *தேசிய கல்வி நிறுவக ஆலோசகர் சபாநாதன்*

(மண்கும்பான்)

மாணவத் தலைவர்களிடையே சிறந்த தலைமைத்துவம் பேணப்பட வேண்டும்.

சமாதானத்தை வளர்த்தெடுப்பதற்கான நல்ல ஊடகமாகவும் இந்த மாணவச் சமுதாயமே விளங்குகின்றது.

கடந்த சனி,ஞாயிறு தினங்களில் யாழ்.பரியோவான் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் மாணவத் தலைவர்களுக்கான விசேட கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய தேசிய கல்வி நிறுவக ஆலோசகர் எஸ். சபாநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் 200வரையான மாணவர்கள் பங்கேற்ற இக் கருத்தமர்வில் அவர் தொடர்ந்தும் கருத்துரை வழங்குகையில்,

மாணவத் தலைவர்களிடையே சிறந்த தலைமைத்துவம் பேணப்படுவது அசியம். ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டியாகச் செயற்படுப்வர்கள் அவர்கள் தான்.

உண்மைச்சமாதானத்தை வளர்த்தெடுக்கும் வல்லமை இவர்களுக்குண்டு.

மாணவர்களின் மனநிலையை மகிழ்ச்சி நிற்றந்ததாக பேணவேண்டியது மாணவத் தலைவர்களின் கடமை.

மாணவத் தலைவர்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் தத்தம் நலன் சார்ந்ததாகவன்றி பாடசாலையின் நலன் சார்ந்ததாக அமையவேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேலும், மாதம் தோறும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான அறிக்கையை மாணவத் தலைவர்கள் மன்றம் மூலமாகத் தயாரித்து தேசிய கல்வி நிறுவகத்திற்கு அனுப்பிவைப்பதன் மூலம், பாடசாலை சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்க உதவியாக இருக்கும் என அவர் கேட்டுக் கொண்டார். (உ-55)

---

## இராசி பலன்

**14.02.2003**
**(மாசி 02, வெள்ளி)**

| | |
|---|---|
| துவாதசி | மு.ப 8.30வரை |
| புனர்பூசம் | மு.இ 11.33வரை |
| இராகுகாலம் | 11.03 -12.33 |
| சுபநேரம் | 6.33 -8.03 |

பிரதோஷ விரதம்

**மேடம்**
முயற்சி கைகூடும்,சகோதரர் உதவி, தெய்வதரிசனம்,வாக்கு மேன்மை

**இடபம்**
குடும்பத்தில் விவாதம், வேலைக் கஷ்டம், பொருள்விரயம், நிலைமாற்றம்.

**மிதுனம்**
தெய்வ தரிசனம்,குடும்பசுகம், பொருள் சேர்க்கை,முயற்சிப்லிதம்.

**கடகம்**
கற்பனை மிகுதி, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், சுபசெலவு

**சிங்கம்**
கீர்த்தி,தெய்வதரிசனம்,நினைத்த காரியம்கைகூடும்,பிரயாணம்.

**கன்னி**
அதிகாரம்,எதிர்பாரத நன்மை, உத்தியோகச் சிறப்பு, காரியநன்மை.

**துலாம்**
உடல் நலக்குறைவு, வேலைக் கஷ்டம், பிரயாணம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
போசன சுகம், காரிய தடங்கல், உறவினர் உதவி, அமைதிக்குறைவு.

**தனுசு**
குடும்பசுகம்,செல்வாக்கு,காரிய நன்மை,தெய்வதரிசனம்.

**மகரம்**
நினைத்த காரியம்,கைகூடும், தனலாபம், நண்பர்கள் உதவி,பிரயாணம்.

**கும்பம்**
உத்தியோக நன்மை, வயிற்றுக்கோளாறு, முயற்ச்சி தாமதம்,போசனசுகம்.

**மீனம்**
வாகனசுகம்;கல்வியில் ஆர்வம், தேகநலன்க்குறைவு,முயற்சி தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

---

# மருந்துத் தட்டுப்பாட்டில் இருந்து விடுபடுவது குறித்து ஆராயவிசேட குழு

(கொழும்பு)

வளைகுடாவில் யுத்தமொன்று மூழும் பட்சத்தில் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் விதத்தில் சுகாதார அமைச்சில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கைகள் பற்றி சிபார்சு செய்யுமாறு சுகாதார அமைச்சர் பீதயாரத்ன விடுத்த உத்தரவுக்கமைவாக அமைசசின் செயலாளர் டாக்டர் றெஜி பெரேரா தலைமையில் மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் முதலாவது கூட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

நாட்டில் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் மருந்து வகைகளை இனங்கண்டு அவற்றை பெருமளவில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும்.

எந்தெந்தவகை மருந்துப் பொருட்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதை வகைப்படுத்தி பட்டியல் தயாரிக்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டது.

போர் தொடங்கும் பட்சத்தில் போரில் ஈடுபடும் நாடுகளிலிருந்தும் அவற்றின் அயல் நாடுகளிலும் இருந்தும் மருந்துகளை பெறமுடியாது போகலாம் என்பதால் சில மருந்து வகைகளை உள்நாட்டில் தயாரிக்க முடிவதால் அவற்றிற்கான மூலப் பொருட்களையும் முன்கூட்டியே தருவிக்க வேண்டும் என்றும், இதற்கான ஏற்பாடுகளில் குழு தீவிரமாக ஈடுபடுவது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

தனியார் மருந்து இறக்குமதியாளர்கள், மருந்து உற்பத்தியாளர்கள், அரச மருந்துப் பொருள் கூட்டுத்தாபனம், பால்மா இறக்குமதியாளர்கள் ஆகியோர் இன்னும் ஒரு சில தினங்களில் நடக்கவிருக்கும்குழுவின் அடுத்த கூட்டத்தில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர். (உ)

---

# மின்சாரம் இன்றி நோயாளர் சிரமம்

(மிருசுவில்)

மிருசுவில் வைத்தியசாலைக்கு இன்னமும்மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

இதனால், தங்கிச் சிகிச்சை பெறும நோயாளர்கள் இரவு நேரத்தில் பல்வேறு சிரமங்களுக்கும் ஆளாகின்றனர்.

இதேவேளை, வைத்தியசாலையின் பணிகள் பலவும் முடங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-81)

ஆற்றாரும் ஆற்றி அடுக இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்
— குறள் —

# வலம்புரி

## மக்களுக்கு அக்கறையில்லை

யாழ்ப்பாண பொது நூலகத்தின் திறப்பு விழா இப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது. யாழ்.மாநகரசபை நிர்வாகம் திட்டமிட்டபடி திறப்பு விழாவை நடத்துவதென முடிவெடுத்திருந்தது. அதே வேளை பொது அமைப்புகள் திறப்புவிழாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இத்தகைய இரண்டும் கெட்டான் நிலையில் பொது நூலகத்தை திறப்பதில்லை என்ற முடிவோடு யாழ். மாநகர சபையின் முதலவர் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

தமிழர்களின் வரலாற்றில் யாழ்.பொது நூலகம் சிங்கள பேரினவாத அரசினால் எரியூட்டப்பட்டமை வரலாற்றில் பதிவாகி விட்டது. அந்த நூலகமே இப்போது புனரமைக்கபபட்டு இன்று திறந்து வைப்பதாக இருந்தது. ஆனால் அந்நிகழ்வு நடைபெறவில்லை. மாறாக மாநகர சபையின் முதல்வா உட்பட ஏழு உறுப்பினர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்து அதனை ஓா வரலாற்றுப் பதிவாக்கி விட்டனா்.

யாழ்ப்பாண மாநகர சபையின் வரலாற்றில் மாநகர முதல்வரும் உறுப்பினர்கள ஏழு பேரும் இராஜினாமாச் செய்தமை இதுவே முதற் தடவை. யாழ். பொது நூலகப் புனரமைப்புப் பணிகள் 99.9 வீதம் நிறைவடைந்து விட்டதென்பது யாழ்.மாநகர சபையின அறிவிப்பு. அதே நேரம் திறப்பு விழாவை எதிர்க்கும் பொது அமைப்புகள் நூலகத்தின் புனரமைப்புப் பணிகள் இன்னமும் 25 வீதம் நிறைவடையவில்லை எனக் கூறி, முற்றுப்பெறாத நிலையில் பொது நூலகத்தை திறக்கக் கூடாதெனக் கோரிக்கை விட்டன.


யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தின் புனரமைப்புப் பணிகளை பொறுத்த வரை யாழ் மாநகர சபை 99.9 வீதம் புனரமைக்கப்பட்டதெனக் கூற பொது அமைப்புகள் 75 சத வீதமே புனரமைக்கப்பட்டுள்ளதெனக் கூறுவதிலிருந்து முரண்பாடு இருப்பது தெரியவருகின்றது. இது இரு தரப்பும் வெளியிடுகின்ற சதவீதக் கணிப்பில் எது தவறு என்பது ஆய்வுக்குரியது.

யாழ் பொது நூலகத் திறப்பு விழாவை நடத்துவதிலும், நடக்க விடாமல் தடுப்பதிலும் யாழ்.மாநகர சபையும் பொது அமைப்புகளும் ஈடுபட்டாலும் இது விடயத்தில் பொது மக்களுக்கு எந்தவிதமான அக்கறையுமில்லை. அவர்களைப் பொறுத்த வரை அவர்கள் தெய்வத்தையே நோகிறார்கள். இறைவா ஏன் எங்களை இலங்கைத் தமிழர்களாகப் படைத்தாய், வாய்பேச முடியாத மிருகமாய் படைத்திருநதாலும் தப்பித்திருக்கலாம். ஆனால் வாயிருந்தும் மௌனிகளாய் இருக்கும் நிலைமை தேவைதானா என்ற கேள்விகள் ஒவ்வோர் உள்ளங்களிலும் பிரமிக்கின்றன.

# ஆஸியில் வாழும் புலம்பெயர்ந்த இலங்கையரைத் திருப்பி அனுப்பவேண்டாம்

## அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை

(கொழும்பு)



போர்ச் சூழல் காரணமாக புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்களை திருப்பி அனுப்ப வேண்டாமென பெருந்தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன் அவுஸ்திரேலியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் பெ.சந்திரசேகரனுக்கும இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் டேவிட் வின்சனுககுமிடையில் அண்மையில் இடம் பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின் போது இலங்கையில் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் குறித்தும்,

குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து போர்ச் சூழல் காரணமாக புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

இச்சந்திப்பின் போது கருத்து தெரிவித்த அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர்,

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு அவுஸ்திரேலியாவின் பூரண ஒத்துழைப்பு உண்டு.

அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்களை திருப்பி அனுப்புவது தொடர்பான விடயம் மீளவும் ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## இளங்கலைஞர் மன்றம் நடத்திய இசைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் கடந்த ஞாயிறன்று நடத்திய இசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### கீழ்ப்பிரிவு

முதலாம் இடம்: அ.மதுராங்கி
இரண்டாம் இடம்: சு.சுகன்ஜன்
மூன்றாம் இடம்: இ.செந்தூர்

### மத்திய பிரிவு

முதலாம் இடம்: அ.சிவசக்தி
இரண்டாம் இடம்: ஜெ.வைஷ்ணவி
மூன்றாம் இடம்: ச.ஜயருக்ஷாயினி

### மேற்பிரிவு

முதலாம் இடம்: ந.பரந்தாமன்
இரண்டாம் இடம்: தி.சந்திர மௌலீசசர்மா
மூன்றாம் இடம்: த.சிலோசினி

இவ் இசைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா, மன்ற இசை விழாவின் இறுதி நாளன்று வழங்கப்படவுள்ளது. (உ)

# பணயப் பணம் கேட்டு வர்த்தகர்கள் கடத்தப்படுவது குறித்து முறைப்பாடு ஏதுமில்லை

## பொலிஸ்மா அதிபர் ஜனாதிபதிக்கு அறிக்கை

(கொழும்பு)

கடந்த ஆண்டில் விடுதலைப் புலிகள் 700 க்கும் அதிகமான இளைஞர்கள், யுவதிகளை கடத்தி யுள்ளார்கள்.

அவற்றில் 100 வரையிலான கடத்தல் சம்பவங்கள் பற்றியே முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்த ராஜா ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து ஆட்சேர்ப்பு, சிறுவர் கடத்தல் தொடர்பான அறிக்கை தயாரிக்கும்படி பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையில் ஐந்து குழுக்களை அமைத்தி ருந்தமை தெரிந்ததே.

அந்த அறிக்கையில் மேலும்,

கடத்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் 15 க்கும் 18க்குமிடைப்பட்ட வயதுடையவர்கள் என்றும், பழிவாங்கும் செயல்கள் இருக்கலாம் என்று அச்சமடைவதால் பெற்றோர் இதுபற்றி முறைப்பாடு செய்வதற்கு முன்வர வில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பேர்ளின் நகரில் நடைபெற்ற 5ஆவது சுற்றுப் பேச்சுக்களில் சிறுவர்கள் கடத்தப்படுவது பற்றி விபரமாக பேசப்பட்டது. புலிகளின் பேச்சாளர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சிறுவர் ஆட் சேர்ப்பு விடயம் தொடர்பாக வெளிப்படையான கருத்துக்களைத் தெரிவித்ததுடன், சிறுவர் ஆட்சேர்ப்பு முற்றுமுழுதாக நிறுத்தப்படும் என்றும் உறுதியளித் திருந்தார்.

இதேவேளை, பணயப் பணம் கேட்டு வர்த்தகர்கள் கடத்தப்படுவது தொடர்பில் தமக்கு இது வரை எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸ்மா அதிபர் சமர்ப்பித்த அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# சுற்றுக் கேடயம் கொக்குவில் அணிக்கு

(சுதுமலை)

கொக்குவில் கிழக்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் விக்ரம்-ராஜன்-கங்கு நினைவாக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி வெற்றியீட்டி சுற்றுக் கேடயத்தை பெற்றுக் கொண்டது.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற பரபரப்பான இந்த இறுதியாட்டத்தில், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணி மோதியது.

குறிக்கப்பட்ட 40 ஓவர்களில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 257 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, மந்தகதியில் ஓட்டங்களைப் பெற்று இறுதி 39 ஆவது ஓவரில் 261 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இவ்வாட்டத்தில் மத்திய சன சமூக நிலைய அணியின் சார்பில் கே.சுதாகரன் 82 ஓட்டங்களையும் சபாஆனந்த 75 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆட்டத் தொடர் நாயகன் விருது கே.சுதாகரனுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

## தினசரி தியானம்

### மந்திர யோகம

மந்திரம் தெய்வீகமானது. மந்திரமும் அதற்குரிய தேவதையும் ஒன்றேதான். மந்திரமே தேவதையாகும். மந்திரம் தெய்வீக சக்தியுள்ளது. நம்பிக்கையுடனும், பக்தியுடனும், தூய்மையுடனும் ஒரு மந்திரத்தை இடைவிடாது ஜெபித்து வந்தால் சாதகனுடைய ஆற்றல் அதிகப்படும். அத்தோடு மந்திரத்தில் மறைந்துள்ள மந்திர சைதன்யத்தை விழித்து எழச்-செய்யும். மேலும் சாதகனுக்கு அமைதியும் நிலைத்த பேரின்பமும், அமரத்தன்மையும் அளிக்கும்.

சுவாமி சிவானந்தர்

## ஆஸ்பத்திரிகள் புனரமைப்புக்கு

# ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 450 மில்லியன் பணம் பயன்பாடு

(கொழும்பு)

அரசாங்க மற்றும் இராணுவ வைத்தியசாலைகளை புனரமைப்புச் செய்வதற்கும், அவற்றில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து இதுவரை 450 மில்லியன் ரூபா செலவளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியுதவியில் இருந்து நோயாளர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் 150 நோயாளர்கள் நிதியைப் பெற்றனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் குறிப்பிடுகையில்,

இருதய சத்திர சிகிச்சை, சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களிற்கு கடந்த 8 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வரும் உதவுநிதியின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்க மாணவர்களை அனுமதிக்கக் கூடாது

## அதிபர்களுக்கு படைத்தரப்பு அறிவுறுத்து

(வவுனியா)

பொது அமைப்புக்கள் நடத்தும் ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்கு பாடசாலை மாணவர்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது என வவுனியா மாவட்ட பாதுகாப்புப் படைகளின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அதிபர்களுக்கான கலந்துரையாடலின் போது இவ்வறிவுறுத்தல் விடப்பட்டது.

இதேவேளை, வவுனியா மாவட்ட வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல ஒன்று வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தர்மரட்ண தலைமையில் காமினி மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (உ-8)

## சமுர்த்தி வங்கி திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேற்கு வலயத்தின் சமுர்த்தி வங்கித் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு 155ஏ, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கலந்துகொள்ளவுள்ளார். (உ-10)

## இரத்தக்களரி.....

கூட நிரப்புவதற்கு மாணவர்களால் உரிய புள்ளிகளைப் பெற முடியவில்லை. ஆனால் இதே தமிழ் மாணவர்கள்தான் ஒரு காலத்தில் உச்சப் புள்ளிகளைப் பெற்று உலகிற்கு முன் மாதிரியாக இருந்தார்கள் என்பதை நினைக்கும் போது இப்போதுள்ள நிலைமையை எண்ணி என் மனம் வேதனையடைகிறது. எத்தனையோ மாணவர்களின் தேவைக்கும் ஈடுகொடுக்கக் கூடிய புதிதாக புனரமைக்கப்பட்ட நூல் நிலையம் 99வீதம் கட்டட வேலைகள் பூர்த்தியாகியிருந்தும் தொடர்ந்தும் திறக்கப்படாமல் இருப்பது யாழ் மாணவர்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

பல ஆண்டுகளாக ஆசிரியராக கடமையாற்றியவன் என்ற காரணத்தினாலும், நூல் நிலையத்தில் மட்டுமே படித்து சட்டக் கல்லூரியில் தேர்ச்சி பெற்றவன் என்ற காரணத்தினாலும், நூல் நிலையத்தின் தேவையை நன்கு உணர்ந்தவன் நான். இந்த நூல் நிலையம் திறக்கக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்பவர்களில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தை மன்னிக்கலாம். ஆனால் மாணவர்களுக்கு அறிவூட்டுவதையே கடமையாகக் கொண்ட ஆசிரியர் சங்கம் இதை ஆட்சேபிப்பது மிகவும் வேதனையான விடயம் ஆகும்.

அடிப்படைகள் வசதிகள் இல்லாத காலத்தில் வன்னிப் பகுதியில் ஆசிரியராகக் கடமையாற்றியவர் நான் குறிப்பாக உயர் வகுப்பு மாணவர்களின் தேவையை அறிந்து பல நூல் நிலையங்களையும், பல பாடசாலைகளையும் கட்டி தரமுயர்த்தி தனிமாவட்டத்தை உருவாக்கி கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முதன் முதலாக மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு போக வைத்தவன் என்பதையும் பல்கலைக் கழக மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இப்போதும் மரநிழல்களிலும், தரையிலும் இருந்து கல்விகற்கின்ற மாணவச் செல்வங்களின் அவலங்களை ஊரில் கண்டுவந்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் இன்று அடுக்குமாடிக்கு லிப்ற் வசதியும், குளிரூட்டி வசதியும் சிற்றுண்டிச் சாலை வசதியும் இல்லாமல் நூல் நிலையத்தைத் திறப்பதா? என்று கேட்பது சரி தா்னா? இதற்கு ஒரு போராட்டம் அவசியம் தானா? குப்பி விளக்கிலும் கொட்டில்களிலும் தங்கள் கல்வியைக் கற்று உச்சப் பதவியை வகித்தது எமது தமிழ் சமூகம் என்பதை உலகம் பாராட்டுவதை இவர்கள் உணரவேண்டும்.

இவற்றுடன் யாழ்ப்பாண சமூக அமைப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த மாநகரசபை ஆயுட்காலம் முடியும் வேளையில் உலகமே மதிக்கத்தக்க ஒரு செயலை பூர்த்தி செய்து அதன் பெருமையை பெறும் சந்தர்ப்பத்தை பறிப்பது மனச்சாட்சியுள்ள எந்தவொரு மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாநகர முதல்வர் செ. கந்தையன் செய்த சேவையை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. இந்தப் பெருமையைப் பெறவிடாது கந்தையன் அவர்களை தடுக்கும் வரலாற்றுத் தவறை என்றாவது ஒரு நாள் இவர்களை உணரவைக்கும்.

இந்நூல் நிலையத்தைத் திறப்பதற்கு நான் வலிந்து கேட்டவனுமல்ல, எதிர்பார்த்தவனுமல்ல. கடந்த காலங்களில் அரசியலில் மிகவும் வன்மையாக என்னால் விமர்சிக்கப்பட்ட மூன்று அரசியல் கட்சிகளின் 14 பிரதி நிதிகளுடன் எமது கட்சி உறுப்பினர் ஒன்பதுபேர் சேர்ந்தே ஏகமனதாக நான் நூல் நிலையத்தை திறக்க வேண்டும் என தீர்மானம் எடுத்தனரே அன்றி நான் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவன் என்பதால் அல்ல என்பதை புரிய வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி.

வெறும் மடு போன்ற விடயத்தை பெரிய மலையாக்கி அர்த்தமில்லாத ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களைச் சொல்லி, இந் நிகழ்வை அரசின் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று சர்வதேச மயப்படுத்தி தடுப்பதால் ஒரு இரத்தக்களறி உருவாக நான் காரணமாக இருக்கவிரும்பவில்லை என்பதை மாநகர சபை முதல்வர் செ.கந்தையனுக்கும், மாநகர சபை உறுப்பினர்களுக்கும் தெளிவு படுத்தி இந்நிகழ்வின் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொண்ட தற்கிணங்க அவர்கள் இந்த நிகழ்வை இரத்துச் செய்வதென தீர்மானித்துள்ளனர். எனது கோரிக்கையை பரிசீலனை செய்து சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவு எடுத்து நிகழ்வை இரத்துச் செய்த மாநகர சபை முதல்வருக்கும் கௌரவ உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் (ந)

---

## கண்காணிப்பு....

கலந்து கொண்டன.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மானிப்பாய் சம்பவத்திற்கு எதிர்ப்புக் கண்டனம் தெரிவித்தும், அச்சம்பவம் குறித்து பக்கச் சார்பற்ற வகையில் விசாரணை நடத்துமாறு வலியுறுத்தியும், யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், யுத்தநிறுத்தக் குழுவிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

(இ-4,7,43)

---

## பொது அமைப்புகள...

இன்று திறக்கத் திட்டமிடப்பட்டுள்ள யாழ் பொது நூலகத் திறப்பு விழாவை ஒத்திவைக்குமாறு பொது அமைப்புப் பிரதிநிதிகள் முதல்வரிடம் வலியுறுத்திக் கூறினர்.

இதேவேளை திறப்பு விழாத் தொடர்பாக தான் நல்ல முடிவை வெளியிடுவதாக முதல்வர் கூறினார் என்று பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் எஸ்.கனகலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-4,7,43)

---

## மாநகர முதல்வர்...

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நான்கு ஜனநாயகக் கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகரசபை ஏக மனதான தீர்மானங்கள் மூலம் செயற்பட்டு வந்தது.

மாநகராட்சியின் அதிகாரத்திற்கு கீழ்வரும் நூல் நிலையம் திறப்பது பற்றி பல்வேறு விவாதங்கள் மக்கள் அபிப்பிராயங்கள் என்பவற்றின் அடிப்படையில் இன்றைய தினம் திறப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

நூல் நிலையத்தின் புனரமைப்பிற்காக மதிபபீடு செயயப்பட்ட 120 மில்லியன் நிதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் நிதியிலிருந்தும், தற்போதைய அரசின் புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியிலிருந்தும், முழுமையாகப் பெற்று கட்டட வேலை கிட்டத்தட்ட முழுமையடையும் நிலையில் உள்ளது.

''லிப்ற்'' ''கன்ரீன்'' போன்ற அமைப்பு வேலைகளுக்காக 21 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டு அதற்குரிய நிதியைத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத்தருணத்தில் ஒன்றியங்கள் மூலமும், பத்திரிகை மூலமும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டன. யாழ். நூல்நிலையத்தின் திறப்புக்கள் அபகரிக்கப்பட்டது, ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள், நகரபிதா, உறுப்பினர்கள் கூட கடுமையாக அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

மக்களுக்கு தேவையான இந் நூல் நிலையம் திறப்பதில் தமிழ்ழ அரசியல் பிரிவு இவ்வாறு தீவிரமாக செயற்படுவது துரதிஷ்ட வசமானது. ஆகவே அறிவுக் கருவூலமான நூல் நிலையத்தை திறப்பதற்கு மக்களின் அமைப்புக்கள் என்று கூறிக் கொள்பவர்கள் நடந்து கொண்ட முறையையிட்டு நாங்கள் வேதனையடை கின்றோம்.

ஜனநாயக நிறுவனமான மாநகராட்சி தன்னுடைய பராமரிப்பில் உள்ள நூல் நிலையத்தை திறப்பதற்கு முடியாத சூழ்நிலையில், உறுப்பினர்களாக தொடர்ந்தும் இருப்பதற்கு எநத உறுப்பினரும் விரும்பவில்லை. குடாநாட்டிலுள்ள ஜனநாயக சூழ்நிலை இப்படித் தான் இருக்கிறது. இந்த நாடும் சர்வதேசமும் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவ் ஜனநாயக மறுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து உறுப்பினர்களாகிய நாங்கள் பதவியில் இருந்து இராஜினாமா செய்து கொள்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-4)

---

## மானிப்பாய்...

கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று நள்ளிரவு யாழ் நகரப் பகுதியில் இது தொடர்பான அறிவிப்பு ஒரு ஒலிபெருக்கி மூலம் வழங்கப்பட்டது. (இ)

---

# இரு அமைச்சர்கள் இன்று யாழ்.வருவர்

(கொழும்பு)

எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியா, வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இன்று திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள யாழ்.பொது நூலகத் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் யாழ்ப்பாணம் வரத் தீர்மானித்திருந்ததாகவும்;

எனினும் திறப்பு விழா நிகழ்வு நடைபெறாவிட்டாலும் யாழ். விஜயம் திட்டமிட்டபடி இடம்பெறும் எனவும் அமைச்சு அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ)

---

# நம்பிக்கையில்லா தீர்மானம் 18இல்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கையிலலாப் பிரேரணை எதிர்வரும் 18ம் திகதி பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் பாராளுமன்றக் கட்டத் தொகுதியில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே விவாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. (த)

# ஜேர்மன் சென்ற குழு கிளிநொச்சி திரும்பியது.

(கிளிநொச்சி)

ஜேர்மனியில் நடைபெற்ற ஐந்தாம் சுற்றுப் பேச்சுகளில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழுவினர் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்காவை வந்தடைந்த இவர்கள் காலை 8.30 மணிக்கு இலங்கை இராணுவத்திற்குச் சொந்தமான இரண்டு உலங்கு வானூர்திகள் மூலம் கிளிநொச்சி வந்தடைந்தனர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மற்றும் விடுதலைப புலிகளின் உறுப்பினர்களான தொல்காப்பியன், நெடியோன், அலெக்ஸ் ஆகியோரே கிளிநொச்சியை வந்தடைந்தவர்களாவர். (இ-5)

# இசை விழா

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழா மன்றக் கலா மண்டபத்தில் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. (உ-10)

# யாழ்-மாநகர சபை நிர்வாகம் விஷேட ஆணையாளரிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையனும் மாநகர சபை உறுப்பினர்களும் இராஜினாமாச் செய்ததையடுத்து மாநகர சபையின் நிர்வாகம் விஷேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி தனது விஷேட செய்தி ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

யாழ்.நூல்நிலையத் திறப்பு விழாவினையடுத்து எழுந்துள்ள சர்ச்சை காரணமாக நேற்றுப் பிற்பகல் கூட்டப்பட்ட விஷேட கூட்டமொன்றில் யாழ்.முதல்வரும மற்றும் உறுப்பினர்களும் இராஜினாமாச் செய்துள்ளதாக முதல்வர் செல்லன் கந்தையன் அறிவித்ததையடுத்து யாழ். மாநகர சபை விஷேட ஆணையளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ம)

# கண்காணிப்புக்குழுவில் புதிய நியமனங்கள்

(கொழும்பு)

சர்வதேச யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொன் பியூறு ஹெவ்டே உட்பட மற்றும் அக்குழுவைச் சேர்ந்த 13 உறுப்பினர்களுக்கு பதிலாக புதிய நியமனங்கள் இடம் பெறவுள்ளன.

ஒவ்வொரு உறுப்பினரினதும் ஒரு வருட சேவைக்கு பின்னர் இவ்வாறு புதியவர்கள் நியமிக்கப்படுவது வழமையானது.

இம் மாற்றங்கள் பெப்ரவரி மார்ச் மாதங்களில் இடம் பெறவுள்ளன.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் இம் மாதம் 22ம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

இவரிடம் மார்ச் 7ம் திகதி ரொன் பியூறுஹெவ்டே தனது பொறுப்புக்களை ஒப்படைக்கவுள்ளார். (உ-3)

---

## ஐந்து...

அணிவகுப்பில் 35 இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அடையாள அணிவகுப்பில் ஆர்.எஸ் ரட்ணாயக்கா, ரி.என்.ஜெயரட்ண, பி.முனசிங்க, சமன் புஸ்பகுமார, காமினி முனசிங்க ஆகியோரே அடையாளம் காட்டப்பட்டவர்களாவர்.

இவர்களில் ஆர்.எஸ் ரட்ணாயக்கா, ரி.என்.ஜெயரட்ண ஆகிய இருவருமே சம்பவ தினத்தன்று தங்கள் அனைவரையும் அழைத்துச் சென்றதாக மகேஸ்வரன் மன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி மிருசுவில் பகுதியில் 8 பொதுமக்கள் படையினரால் கொலை செய்யப்பட்டமையும் அச் சம்பவத்தின்போது முக்கிய சாட்சியான பொ.மகேஸ்வரன் தப்பியோடி வந்து சம்பவத்தை வெளிப்படுத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)


## இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழா 2003

இடம் : மன்றக் கலாமண்டபம்
காலம் : 14.02.2003 - 23.02.2003 வரை

### நிகழ்ச்சி நிரல்

இன்று (14.02.2003) வெள்ளிக் கிழமை (1ம் நாள்)
லிங்கன் கிறீம் ஹவுஸ் நிறுவனத்தின் ஆதரவில்
மாலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை

**மங்கள இசை**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| K.R.சுந்தரமூர்த்தி | R.S.இராமதாஸ் |
| R.S.தேவதாஸ் | R.N.பிரசன்னா |

**மங்கள விளக்கேற்றல்**

திரு.S.அப்புலிங்கம்
(உரிமையாளர். லிங்கன் கிறீம் ஹவுஸ்)
மாலை 5.00 மணி முதல் 5.25 மணி வரை

**திருமுறை அரங்கு**

செல்வன்.அ.அமிர்தலோஜன்
வயலின் K.வனஜா
மிருதங்கம் N.சதீஸ்
மாலை 5.25 மணி முதல் 5.50 மணி வரை

**குழுப்பாடல்**

| | |
|---|---|
| S.றோகனா | S.கிருஷ்ணாலினி |
| A.கௌசிகா | S.காயத்திரி |
| V.தீபா | S.ருஷாந்தி |
| T.சாளினி | P.டுயந்தினி |
| J.யாழினி | K.நிஷாந்தி |

வயலின் : கிருஷ்ணவேணி மயில்வாகனம்
மிருதங்கம் : V.றமணன்
மாலை 5.50 மணி முதல் 6.10 மணி வரை

வீணை : K.வித்தகி மிருதங்கம் : K.கஜன்
மாலை 6.10 மணி முதல் 7.00 மணி வரை

**வயலினிசை**

வயலின் : தம்பு சற்குருநாதன் முகர்சிங் : S.செந்தூரன்
மிருதங்கம் : K.துரைராசா தவில் : K.M.வாசகர்
மாலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை

**இசைக்கச்சேரி**

பாட்டு : N.செல்லமுத்து மிருதங்கம் : K.அனந்தகோபன்
வயலின் : K.பத்மநாதன் முகர்சிங் : N.சதீஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சட்டநாதர் வீதி
நல்லூர் [C/5760] மன்றத்தினர்



## குறைந்த கட்டணத்தில் பிளாஸ்ரிக் கதிரைகள் வாடகைக்கு வழங்கல்

வலி கிழக்குப் பிரதேசசபை பிளாஸ்ரிக் கதிரைகள் பொதுத் தேவைக்காக குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விட தீர்மானித்திருப்பதால் எல்லைப் பரப்பிற்குட்பட்ட பொது மக்கள் தங்கள் தேவைகளுக்காக கதிரைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

*மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு அறியலாம்*

வலி கிழக்கு பிரதேச சபை, செயலாளர்
நீர்வேலி [C/5761]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.